# தித்திக்கும் தீ!

அக்கல்லூரி வளாகம் மிக விசாலமானது என்பதால் மாணவிகளின் உற்சாக பேச்சும் கூச்சல்களும், கடலில் கரைத்த பெருங்காயமாய் நீர்த்திருந்தன. இருந்தாலும் ஹாஸ்டல் வார்டன் சரளா, தன் அறையின் கதவை மூடிவிட்டு மேஜையின் முன் அமர்ந்து தன் கணக்கு வழக்கு நோட்டைப் பிரித்தார்.

விடுதியின் ஆரவாரங்களுக்கிடையே அவரால் எண்ணை, எழுத்தை புரிந்து கொள்ள முடியவில்லை. 'மல்டி-டாஸ்க்கிங்' அவருக்கு கைவராத கலை. ஆனால் இந்த கல்லூரியின் கட்டிப் பெண்கள் மூன்று, நான்கு வேலைகளை எப்படி அலட்சியமாய் ஒரே சமயத்தில் செய்கின்றார்கள் என்பதை சற்று எரிச்சலாகவே வியப்பார். பாட்டு கேட்டபடி இடுப்பை அசைப்பவர்கள் தோழியிடம் பேசி சிரிப்பதோடு மும்முரமாய் 'செல்'லில் குறுஞ்செய்திகளையும் தட்டி விடுவது எப்படி? இத்தனையோடு மறுநாளுக்கான திட்டங்களும் அல்லவா அந்நேரம் தயாராகும்.

அதுவரை நின்று நடந்ததில் களைத்த தன் முதுகைப் பிடித்தபடி 'ஹப்பா' என்று நாற்காலியில் அமர்ந்த அந்த ஐம்பத்தைந்து வயது பெண்மணி, சளைக்காமல் நொந்த தன் பிடரியை நீவிய போது அவர் எதிர்பார்த்தபடியே அல்லது பயந்தது போலவே அறையின் கதவு தட்டப்பட்டது.

இந்த கதவிற்கும் மேஜையின் மேலுள்ள தொலைபேசிக்கும் கண்கள் உண்டோ என்று சரளாவுக்கு ஒரு சந்தேகமுண்டு. பின்னே தான் உட்கார்ந்ததுமே அவை எப்படி அத்தனைக் கணக்காய் ஒலி எழுப்புகின்றனவாம்?

வரலாற்று நாயகன் முசோலினியின் அலுவலகத்தின் வெளியே-

''உள்ளே வருகிறவர்கள் என்னை கவுரவிக்கிறார்கள். வராமல் இருப்பவர்கள் என்னை மகிழ்விக்கிறார்கள்''- என்ற அறிவிப்பு இருக்குமாம்.

தானும் 'என் சாத்திய கதவைத் தட்டாமல் போகிறவர்கள் எனக்கு பெரிய உபகாரம் செய்கிறார்கள்- நன்றி' என்றொரு அறிவிப்பு பலகையைத் தொங்க விடலாமோ?

யோசனையை, எரிச்சலை அடக்கியபடி 'கம் இன்' என்று குரல் தந்ததும் மிருதுவாய் கதவைத் தள்ளியபடி உள்ளே நுழைந்தவளைக் கண்டவரின் கடுப்பு, கனிந்த முறுவலாய் மாறியது.

காஞ்சனா ஜெயதிலகர்

ஏனெனில் உள்ளே வந்தது அதிதி.

முதுகலைக் கல்விக்காக இந்த கல்லூரியில் சேர்ந்த அவளை மாணவிகள் குறிப்பிட்டது அழைத்தது அழகு என்று தான்!

சேர்ந்த புது மாணவியைப் பற்றிய தகவல்களை குறித்துக் கொண்ட வார்டன் சாரா கேட்டார்- 'அதென்னம்மா பேர்- அதிதி?''

'விருந்தாளின்னு அர்த்தமாம் மேம்...'

''ஓ...?' என்ற சாராவின் கண்களில் கேள்வி மிச்சமிருப்பதை உணர்ந்த மாணவி,

'இந்த உலகத்தில் நாம நிரந்தரமில்லையே... கொஞ்ச நாட்கள் விருந்தாளியாப் போகத்தான் இந்த இடம்னு புரிஞ்சால் நம் வாழ்வை சிறப்பாய் அமைப்போமாம் மேம்...'

சிறு முறுவலோடு அப்பெண் பேசியபோது அவள் கன்னங்கள் குழைந்து லேசாய் பக்கம் அழகுக் குழிகள் கேட்பவரின் கவனத்தை ஈர்த்து அதை ரசிப்பவர்கள் அவள் சொல்வதை கவனிக்காமல் விடக் கூடும்!

ஆனால் இளம் பெண்களின் அழகு, அலட்டல்களில் தான் சாய்ந்து விடக்கூடாது என்பதில் சாரா மிகக் கண்டிப்பு தான். பூனைக்குட்டியாக தன் காலைச் சுற்றி வரும் குட்டிகள், வீட்டிலிருந்து மாவடு ஊறுகாய், நெய் முறுக்கு என்று எடுத்து வரும் கட்டிகள் எல்லாரையும் விடுதியில் சேர்ந்த ஒரே மாதத்திற்குள் அவர் கணித்து விடுவார். யாரை எந்த அளவிற்கு நம்பலாம், நம்பக்கூடாது என்பதெல்லாம் அவருக்கு புரிந்து போக, பெண்களும் அதற்கு மேல் நாடகமாடாமல் பம்மி விடுவார்கள்.

முதலில் அதிதியின் அற்புத அழகைப் பார்த்தவர் அவளை வெகு உஷாராய்த் தான் கண்காணித்தார்.

ஆனால் இந்தப் பெண் கண்ணாடியைப் பார்க்க மாட்டாளோ? துளி அலட்டல் இல்லாமல் இயல்பாய் வளைய வந்தவளை சற்று ஆச்சரியமாகவேதான் கவனித்தார் சாரா.

மாசு மருவில்லாத பாலின் நிறத்தில் அளவான உயரத்திலிருந்த அதிதிக்கு அருமையான வளைவுகள்.

கூர்மையும், சிநேகமுமான கருவிழிகள்.

சீரான பல்வரிசையை மூடிய ரோஜா உதடுகள்.

கைகொள்ளாத கூந்தல், குமிழ் குழியென்று அபாரமான அழகு. இது போதாது என்பது போல அதிதி பெரிய இடத்துப் பெண். அதிலும் அவளைப் பெற்றவர்கள் உயிருடன் இல்லை என்றறிந்த சாரா துளி பரிதாபப்பட்டாலும் படு உஷாரானார்.

ஏனெனில் இந்நிலையிலுள்ள பெண்கள் 'என் மீது அன்பு காட்ட யாருமில்லை. யாராவது எனக்கு சிறிது நேசம் தருவீர்களா?' என்ற ஏக்கத்தில் தவறான இடங்களிலிருந்து அன்பைப் பிடுங்கப் பார்த்து பெரும் பிரச்சனையில் சிக்கிக் கொள்வார்கள்.

ஆனால் இந்தப் பெண் யாரிடம் இருந்தும் அதிகம் எதிர்பார்க்காமல், அளவான இனிமையுடன் பழகினாள்.

படிப்பிலும் அவள் கெட்டிக்காரி என்றாக, கண்டிப்பிற்கு பேர் போன சாராவிற்கே இந்த இளம் பெண்ணின் மேல் ஒரு இளக்கம் தான். இந்த



பெண்ணைத் தான் கண் கொத்திப் பாம்பாய் சதா கண்காணிக்கத் தேவை இல்லையென்ற நிம்மதி!

அதாவது அதிதி தன்னை தச்சரிப்பதில்லை என்பதால் வந்தவளை இணக்கமாகவே ''வாம்மா- என்ன பெரியப்பா வீட்டுக்கு நாளை போகணுமா?'' என்று கேட்டார். ஏனெனில் அதற்கான அனுமதி கேட்கத்தான் அதிதி இப்படி தன்னைத் தேடி வருவது தவிர நாளை சனிக்கிழமையும் ஆகிற்றே.

''வந்து மேம்... எனக்கு வேற ரூம் அலாட் பண்ண முடியுமா?'' வந்த வேண்டுகோளில் சாராவின் புருவங்கள் சுருங்கின.

''நீயும் இலகாவும்தானே அந்த டபுள் ரூமில்- என்ன பிரச்சனை?''

''பிரச்சனை வர வேண்டாம்னுதான் மேம்...''

அதற்கு மேல் சொல்லவா- சொல்வதென்றால் எப்படி என்ற தயக்கத்துடன் விழித்த இளையவளை கூர்ந்து கவனித்தார் சாரா.

ஏறக்குறைய மூன்று செமஸ்டர்கள். அதாவது ஒன்றரை வருடங்களை இந்த அறைத் தோழியுடன் கழித்த அதிதி இப்போது மாற்றம் வேண்டுவதேன்? யாரையும் அனுசரித்துப்போபவளின் பிரச்சனை என்ன?

முதுகலை மாணவிகளுக்கு தனி அறை தரப்படும். செலவைக் குறைக்க எண்ணுபவர்களே இருவராய் ஒரு அறையில் தங்குவார்கள். வசதியான அதிதியின் பெரியப்பா.

'ஸிங்கிள் ரூம் எடுத்துக்கோம்மா' என்றதை மறுத்து அதிதியே தான். 'வீட்டுல தனியாயிருக்கிற நான் இங்கே எல்லோரும் சேர்ந்து இருக்கிறேனே பெரியப்பா' என்று தேர்ந்தெடுத்ததுதான் அந்த அறை.

''தனியாயிருந்தால் படிக்க வசதின்னு தோணுது, மேம்.''

''ம்ம்... மாசம் ஐநூறு ரூபாய் குறையும் என்பதால் வேறு யாரேனும் மூணு பேர் இன்னும் மெஸ் பில் கட்டலை. ஆக கணக்கில் ஒரே குறையடி...'' என்று ஆரம்பித்த சாரா தன் பிரச்சனைகளைப் பேச, அதைக்கேட்ட இளையவளின் புத்தி தன் தற்போதைய பிரச்சனையை அலசியது.

கடந்த ஒரு வருடமாய் ஒரே அறையைப் பகிர்ந்த இலகா அறிமுகமானதும் பழகியதும் நல்ல தோழமையுடன் தான். ஆனால் மிக நெருக்கத்தில் தன்னைப்பார்த்தவள் சீக்கிரமே அனைத்திலும் தங்களை ஒப்பிட ஆரம்பிக்க அது அதிதியின் சங்கட அனுபவமானது.

எப்பா ராமையா பட்டாசுக் கடை வச்சிருக்கியே தீபாவளிக்கு வியாபாரம் சூடுபிடிச்சிட்டா?

அட போப்பா... கடையே தீப்பிடிச்சி எரிஞ்சிப் போச்சு.



## 2

அதிதியை ஏற்றிக் கொண்ட அந்த வெண்ணை நிற 'ஸ்கோடா' சாலையில் வெண்ணையாகவே வழுக்கியது.

"இளைச்சப்பல இருக்கியே பாப்பா. ரொம்ப படிப்பா?" பல வருடங்களாய் குடும்பத்தில் பணி புரிந்த டிரைவர் உரிமையாய் கேட்டார்.

அதிதி புன்னகைத்தாள்.

"நம்ம வீடு அரண்மனை போலிருக்குது! நம்ம அம்மா, உங்க பெரியம்மா இறந்த பிறகு நம்ம ஐயா தனி ஆளாய் அங்கே. தருண் தம்பி வெளிநாட்டுல போய் ஒரு வருஷமாச்சு. நீங்களேனும் வந்து இருந்தாவில்ல வீட்டுக்குளை?"

"பெரியப்பா வேலையில பிஸி. அங்கே தனியா இருக்காமல் ஹாஸ்டல்ல என் வயசுப் பெண்களோட இருக்கிறது நல்லதுன்னு பெரியப்பாவும் அபிப்ராயப்பட்டதால தான் அருணண்ணா நா இங்க வந்தேன்."

அருணுக்கு தலை மொத்தமும் நரைத்து விட்டாலும் அவன் அவரை அழைப்பது 'அண்ணா' என்று தான். அதில் அந்த வயோதிபருக்கும் ஒரு தனி பெருமை, திருப்தி.

காரை ஓட்டினோமா, ஏறினவரை இறக்கி விட்டோமா என்றில்லாமல் பாசங்காட்டுவார்.

"பீட்ஸா, பர்கர் ஏதேனும் வாங்கிக்கலாமா அதிம்மா? நம்ம சிலாட்டுக்குப் போய் சேர ஒரு மணி நேரமாயிடும்."

"கன்டல் சாப்பிட்டேன். போதும்."

"எப்ப வருவீங்கன்னு பெரியவரு அங்க காத்திட்டு இருப்பாரு."

"படிப்பு முடிஞ்ச பிறகு முழுக்க தான் இனி பெரியப்பா கூடத்தானே?"

தனிமையை வெறுத்தாலோ என்னவோ பெரியவர் தேவாரம் பயணங்களை மிக விரும்பினார். போனகல்லூரி விடுமுறையின் போது இவர்கள் இருவருமாய் சிங்கப்பூர், மலேசியா போய் திரும்பினார்கள். வியாபார நிமித்தமாய் தேவாரம் பலமுறை போய் வந்த நாடுகள் அவை என்றாலும், தம்பி மகளோடு ஒரு உல்லாச பயணியாய் அவற்றை சுற்றி வந்தது அலாதியாய் களைக்க

"வர்ற மாசம் தான் ஆஸ்ட்ரேலியா போறேன்டா அதி. என் ஸ்கூல் ப்ரெண்ட் அங்கே செட்டிலாயிட்டான்..."

தெரியும் பெரியப்பா. சொல்லியிருக்கீங்க மிஸ்டர் ரிச்சர்ட்."

"விசா எல்லாம் ரெடி. நீயும் வாயேன். எங் கம்பெனி இருந்தால் உனக்கு ஈடு தர வேணும். நாங்களும் அலுக்காமல் சுற்றுவோமே?"

"இந்த செமஸ்டர் எக்ஸாம்ல் வருதே பெரியப்பா. அது போக இன்னும் ப்ராஜெக்ட் இருக்குது."

"அதை அங்கேயே ஒரு கம்பெனியில் முடிச்சிடுடா"

"ஏற்கனவே இங்கே ஒரு பெரிய கம்பெனியை அதற்காய்



தேர்ந்தெடுத்து அங்கே தான் ப்ராஜெக்ட்டை செய்ய அனுமதியும் வாங்கித் தந்தது நீங்க தானே பெரியப்பா?"

தேவாரம் தலையை ஆட்டினாலும் அவர் முகத்தில் மாற்றமிருந்தது.

"ரிச்சர்ட்டுக்கு அந்த வருஷமாய் இதயத்துல பிரச்னை. இப்பதான் துணிந்த பைபாஸ் பண்ணிகிட்டான். இப்போ முன்னைப் போல துடிப்பா உணர்றேன். இன்னும் அது மாசங்களுக்கேனும் தொலைதூர பிரயாணம் வேண்டாம்ராங்க. நீ வாயேன். மெல்லிஸ், பெர்த்தில், கோல்ப்னு வாழ்க்கையில் கடைசி ரவுண்டைக் கொண்டாடுவோம்னு..."

"போயிட்டு வாங்க பெரியப்பா."

அவரது தயக்கத்தை தன் அழுத்தமான வார்த்தைகளால் துடைத்தெடுக்க முயன்றாள் அதிதி.

"வர்ற வருஷமானால் நீயும் கூட வரலாமேன்னு யோசிக்கறேன்..."

"இப்ப என் படிப்பை நல்லபடி முடிக்கணுமே பெரியப்பா அதுவும் கவுரவமான மார்க்ஸ்லோட......"

"முடிக்கலைன்னாலும் உன்னை யாருடா கேட்கறது? உன் அண்ணா தருணோடு நம் ஆபீஸில் பார்ட்னரால் உட்கார உனக்கு பதவி தயார்."

"அண்ணனே இங்கே இல்லையே. எம்.எஸ்.ஸை அமெரிக்காவில் முடிச்சவர், 'இங்கே வொர்க்கிங் கன்டிஷன் பிரமாதம்னு அங்கேயே ஒரு வேலையும் தேடிக்கிட்டாங்க."

அதில் தன் மருமகனுக்கும் கணிசமான பங்கிருப்பது பெரியவருக்கு புரிந்தது. இந்தியாவில் முதலாளியாக இருக்கலாம் என்றாலும் சிக்காமல் சுதந்திரமாய் சுழலுவது இளம் தம்பதிகளுக்கு மிகப் பிடித்துப் போக அவர்களிடம் தாய்நாடு திரும்புவது பற்றிய பேச்சே இல்லை!

"ம்ம்... உனக்கு ஒரு ஸ்மார்ட் பையனாய் பார்த்துட்டால் உங்க ரெண்டு பேரிடமுமாய் பிஸினஸை தந்திட்டு, நான் அக்கடான்னு இருப்பேன். இப்போ எனக்கு பிரயாணம் பண்றது புது இடங்களைப் பார்ப்பதெல்லாம் பிடிக்கும்னாலும் அங்கேயும் போனும்லே-டாபுமாய் மனசு இங்குள்ள வரவு செலவில் தானே சிக்கிக் கிடக்குது?"

"வேலைகளை குறைக்கக்கோங்க பெரியப்பா- ஒடி உழைச்சு உயருவது எவ்வளவு முக்கியமோ அதே போல ஒரு வயசிற்கு மேலே உட்கார்ந்து வாழ்வை அனுபவிப்பதும் அவசியம் தானே?"

"எனக்கு ஒன்னாய் பேரக் குழந்தைகள் இருந்தால் கூட.. இத்தனை பிஸினஸையும் ஏறக்கட்டிடுவேன். இங்கே மருமகனின் முகம் பார்த்தே நாளாச்சு..."

தேவாரத்திடமிருந்து ஒரு பெருமூச்சு விடுபட்டது.

## 3

இன்னல்கள் அத்தனையும் நிறைந்திருக்க அந்த மாடி அறையில் தேவாரத்தின் நான்கு நண்பர்கள் வட்டமாய் நாற்காலிகளை இட்டு அமர்ந்திருந்தனர். கடல் அலைகளின் ஆர்ப்பரிப்பிற்கு இணையாய் அடிக்கடி எழும்பிய அவர்களது சிரிப்பு சத்தம்

[illegible]

மன்னர், மகாராணியை கூட்டிக்கிட்டு சுரங்கப்பாதையை நோக்கி ஓடுறாரே ஏன்?

தீபாவளி பட்டாசு வெடிச் சத்தத்தை கேட்டதும் பக்கத்து நாட்டு மன்னன்தான் படை எடுத்து வந்துட்டான்னு பயந்து ஓடுகிறார்.





[illegible]

4

[illegible]

கடவுளே... அதற்குள்ளே இங்கு இருப்பதால் அந்தக் கொலையாளிகள் சொன்ன இருவருமே வெளியேறி விட்டார்களா? ஆக இந்நேரம் அந்த ஜீவாவின் வயிற்றிலோ மார்பிலோ அந்த நீண்ட கூர் கத்தி செருகப்பட்டு, ரத்தமும் முடியுமாக அவன் வாய் பொத்தப்பட்டு... ரத்தத்தில் அவன் விழுந்து துடித்துக் கொண்டிருப்பானோ? அதிதியின் முகம் வெளிறியது.

அதிர்ச்சியில் அழுகையும் முட்டிய நேரம்தான் ஜிம்மின் ஓரமாகிருந்த அச்சிறு அறையின் கதவு திறந்து உடை மாற்ற, துவாலைகள் அடுக்கப்பட்ட ஒரு சிறு அறை அது. அதிலிருந்து வெளிப்பட்டவன் துவாலையால் வியர்த்த தன் கழுத்தை, முகத்தைத் துடைத்தபடி 'செல்' போனில் பேசிக் கொண்டிருந்தான்.

அதிதியின் பார்வை அவசரமாய் அவன் தலையைத் தடவியது. இல்லை இவனுக்குச் சொட்டை இல்லை. அடர்ந்த கருள் முடி. ஆக கொலையாளிகள் குறிவைப்பது இந்த... இளைஞனுக்குத் தான். இங்கிருந்தால் அவர்கள் சொன்ன வடக்கத்தி வழுக்கைத் தலையன் இப்போதான் வெளியேறி இருக்க வேணும்... ஆக எந்நேரமும் அவர்கள் நுழையலாம்... நுழைந்து... "செல்லின் அவன் வெகு உல்லாசமாகவே கொண்டிருந்தான்"

"ஆமா பேபி... அப்பா ஜெயிச்சிட்டேன். நீ என்ன பண்ணிட்டிருக்கே... ஆஹா... ஸ்ட்ராபெரி ஐஸ்க்ரீம் சாப்பிடறீங்களா?... அப்பாக்கும் கொஞ்சுண்டு மிச்சம் வை... என்னா"

"அதிர்ச்சியில் உறைந்த அதிதியை அந்தப் பேச்சு உலுக்கியது ஐயோ... இவனுக்கு ஒரு மகளுண்டு.. தன் அப்பாவுடன் பசியக் காத்துக் கொண்டிருக்கும் ஒரு சின்ன மகள்... இவனை எப்படியாவது காப்பாற்றி விட வேணுமே...

"அதே நேரம் 'ஜிம்'மின் பிரதமான வாசல் மெல்ல விரிய ஆரம்பிக்க, சற்றே திகிட்ட உரத்தக் குரலுடன் அதிதி எதிரே வந்தவனின் முன் நின்று பேச ஆரம்பித்தாள்.

"ஜீவாண்ணா, உங்க பொண்ணுதான் என்ன இங்கே அனுப்பியது. அவ ஐஸ்க்ரீம் உருகறதுக்குள்ளே அப்பாவை கூட்டி வரணுமாம். மற்றவர்களும் இ... இதோ வந்துட்டே இருக்காங்க- வாசிங்டனாபோலில் தொடர்பைத் துண்டித்தவனின் பார்வையில் கேள்வி முகத்தில் குழப்பம்!" பேச முயன்றவனை அவளது முகத்தின் கலவரம், விழிகளின் எச்சரிப்பு தடுக்க... தயங்கி நின்றான்.

படபடப்பும் பரபரவென்ற எல்லாஜிலுமாய் தன்னைப் பெயரிட்டு, ஏன் உறவும் சேர்த்து ஒரு புதியவள் அழைத்துப் பேசியதில் அந்த இளைஞனுக்குப் பேச்சு ஓடவில்லை.

"இந்த லாபியின் டோர் வழியே போயிடலாம்- எல்லாரும் இந்தப் பக்கமாய்த்தான் காத்திருக்காங்க- வாங்க" என்றவள் குழம்பி நின்றவனின் கைப் பற்றி இழுத்த போது, அவன் கண்கள் அச்சத்துடன் பிரதான வாசலை அடைத்தது போல நின்ற இருவரைப் பார்த்து விலக, அவன் ஒரு முடிவுடன் அவளுக்கு இழுபட்டான்

நுழைந்த சிறு வாசிலின் வழியாகவே அவனை இழுத்தபடி



வெளியேறியவள் கதவு சாத்தப்பட்டதும் கெஞ்சினாள்.

"சீக்கிரமா நடங்க... ஆ... ஆபத்து"

சொன்னவள் ஏறக்குறைய ஓட, அவளது எட்டுகளும் நீண்டன. அவளுக்கு அது மிக பரிச்சியமான இடமென்பதால் ஒரே திருப்பங்களிலேயே வெளிச்சமும், சற்று நடமாட்டமுமுள்ள இடம் வந்து சேர்ந்தனர்.

'லம் போட்ஸ்' அடைபட்ட பெரிய கண்ணாடிகளையும் தாண்டி, உணவு பரிமாறப்படும் பகுதி வரும் வரை அவளது ஓட்டம் நிற்கவில்லை.

மெல்லிய இசையும் அதற்குத் தாளம் சேர்ப்பது போல பிங்கான் மீது வெள்ளிக் கரண்டிகள் தட்டும் ஒலியுமாய் இருந்த நிறைந்த வெளி உணவகத்திற்கு வந்து நின்றவளுக்கு மூச்சு வாங்கியது.

ஆழ மூச்செடுத்தவளுக்குத் தன் கால்கள் நடுங்குவது புரிய, 'பட்'டென்று ஓரமாய் கிடந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

காற்று அவள் முகத்து வியர்வையை உறிஞ்சிக் கொண்டிருந்தாலும், உடலின் நடுக்கமும், உதடுகளின் துடிப்பும் அவளது அதிர்ச்சி விலகவில்லை என்றன.

"என்னாச்சு... நீங்க...?"

"நாங்களும் இங்கே தங்க வந்தவங்கதான்..." என்று ஆரம்பித்தவன் முக்கியமான பகுதிக்குத் தாவினாள்.

"அந்த ரெண்டு பேர் உங்களைக் கொல்ல வந்தாங்க..."

அவளையே பார்த்தபடி எதிர் இருக்கையில் மெல்ல அமர்ந்தவன் 'என் பெயரைச் சரியாய் சொன்னீங்க. ஆனா என் பொண்ணு இங்கேயில்லை. அவ இருக்கறது சென்னையில. ஒரு பிஸினஸ் டீல் பேச இந்த ரிஸார்ட்டுக்கு வந்தேன்... கூட வந்தவங்க 'பார்'போனதால், நான் 'ஜிம்' மிற்கு வந்தேன்..." என்றவனது புருவங்கள் உயர்ந்தன.

"நான் மிஸ்டர்... தேவராஜின் மகள்... அதாவது அவருடைய தம்பி மகள். பெயர் அதிதி... பெரியப்பா இந்த ரிஸார்ட்டின் பார்ட்னர்களில் ஒருத்தர். மத்தவங்களோடு 106-ம் அறையில் இருக்காங்க. எம்.பி.ஏ. செகண்ட் இயர் படிக்கிற நான்..."

கடகடவென்று சொன்னவள், சூடான உணவுத் தட்டுடன் நடந்த ஒரு சிப்பந்தியைக் கண்டு, அவரை அழைத்தாள்.

"பாலகர் அண்ணா, ஜூஸ்... போனில் நான் இங்கிருப்பதால் பெரியப்பாட்ட சொல்லிடறீங்களா?"

"ஆகட்டும்மா... எப்ப வந்தீங்க...? உங்களுக்கு இங்கயே பரிமாறிடவா? ஐயாமாருக்கு இன்னைக்கு வாப்ஸ்டர் பிரைஸ்"

"இல்லை ரெண்டு ஜூஸ் கொடுங்க. டின்னரைப் பெரியப்பாவோட ரூமிலேயே சாப்பிட்டுக்கறேன்"

"ரைட்."

'இப்போது நம்பிக்கை வந்ததா?' என்பது போல ஜீவாவைப் பார்த்தவள் சற்றுக் கோர்வையாக தான் கேட்க நேர்ந்த சம்பாஷணையைச் சொல்லிவிட்டு,

"முதல்ல நான் நம்பலைதான்... ஆனா அவங்க கையிலிருந்த கத்தி,

ரோ... ரொம்பக் கஷ்டமா... நீளமாய் இருந்தது... அதைப் பார்த்த பிறகுதான் மிரண்டுட்டேன். ரெண்டு பேர் ட்ரிம் முக்குள்ளே இருப்பாங்க, அடுத்தவர் தாத்- இன்டிடிவன், கொஞ்சம் வழுக்கைத் தலையனும் பேசினாங்க...''

யோசனையாய் தலையாட்டினான்.

''ஆமா, அப்படி ஒரு ஆள் இருந்து, அப்பதான் வெளியேறினார்...''

''அவர் போறதும் உங்களைக் கொலை செய்யப் போறதாப் பேசினாங்க...''

தாக்ஸம்மா நீ நடுங்கிப் போயிருந்தது தெரிஞ்சது. அத்தனை பயத்தையும் மீறி என்னைக் காப்பாற்ற நீ ஜிம்மிற்குள் வந்தது ரொம்பப் பெரிய விஷயம்... வேறொரு பெண்... அங்கேயிருந்து ஓடிப் போயிருப்பா... ஒரு வழியாய் ஓடிய அவள் விஷயத்தைச் சொல்லி ஆட்கள் இங்கே வந்து பார்ப்பதற்குள் நான் பிணமாகியிருக்கலாம்.''

அதிதிக்கு சிலிர்த்தது.

ஆவி பறக்க வந்த சூப்பைப் பாதி குடித்த பிறகுதான் அதிர்ச்சியில் நடுங்கிய தன் உடம்பு சற்று நிதானித்தது போலிருக்க,

''இப்ப யோசித்து பார்க்க... நான் உள்ளே வந்தது அசட்டு துணிச்சலில்தான் அந்த ரெண்டு பேரும் வந்து... உங்களைத் தாக்கி இருந்தாலும் என்னால் தடுக்க முடிஞ்சிருக்காது... மயங்கி விழுந்திருப்பேன்னு தோணுது''.

''இல்லை அதிதி. நீ அசட்டுப் பெண்ணே இல்லை! ஏதோ உன்னோட வேறு சிலரும் வந்திருப்பதாய் நீ ரெண்டு தரம் குறிப்பு தந்தே... ஆக கொலையாளிகள் நழுவிட்டாங்க... சமயோசிதமாய்த்தான் நடந்துகிட்ட...''

அவளுக்கும் அந்த சூடான சூப் தேவைப்பட்டது போலும்... முழுக்க பருகியவன் எழுந்தான்.

''உன்னை... நீ எனக்குப் பத்து வயதேனும் இளைய பெண் தவிர முதன் முறையே அண்ணா'ன்னு அழைச்சதால் ஒரு ஸ்பெஷல் பேசும் உரிமையை எடுத்துக்கறேன் அதிதி. உன் பெரியப்பாவிடம் நானே கொண்டு போய் சேர்த்து முறைப்படி நன்றி தெரிவிக்கணும்... ஆனா நீ என்னோடு வருவது ஆபத்துன்னு படுது... நானும் தொடர்ந்து இங்கே தங்காமல் வீடு திரும்பிடலாம்னு முடிவு செய்திருக்கேன்...' என்றவன் இரு சிப்பந்திகளை அழைத்து அவளை, அவளது அறைக்கு இட்டுப் போகச் சொல்லிவிட்டு மறுபடி நன்றி தெரிவித்துவிட்டு விலக, கனவில் நடப்பது போலதான் அறைக்கு வந்து சேர்ந்தாள் அதிதி!

ஜீவா இருவரைத் தனக்குத் துணையாய் அனுப்பியது, அனுப்பப்பட்ட சிப்பந்திகளுக்கே வினோதமாய் பட்டிருந்தாலும் அவர்கள் வாய் திறக்காமல் உடன் வந்தது அவளுக்கு நிம்மதியாயிருந்தது. யாரிடமும் எதுவும் பேசும் மனநிலையில் இல்லை அவள்.

பெரியப்பாவிடம் கூட எதும் சொல்ல வேண்டாம் என்றே முடிவு செய்தாள். ஆனால் அறையை அடைந்து, அங்கிருந்தவர்களுக்குப்



பரிமாறி, பேசி, தானும் உண்ணுவதாய் பாவனை காட்ட பெருமுயற்சி தேவைப்பட்டது.

தலை வலியே போர்வையை இழுத்துப் போர்த்தியபடி முடங்கிவிட்டால் போதும் என்று மனதும் தேகமும் கெஞ்சின.

ஆனால் படுத்து கண்களை மூடினால் தான் மறக்க எண்ணும் அந்தக் காட்சியே உள்ளே மீண்டும் மீண்டுமாய் ஓடும் என்றும் பட்டது.

ஊழியர்கள், உணவின் தரம், ரீஸார்ட்டைப் புதுப்பிப்பதற்கான செலவு பற்றியெல்லாம் பேசியவர்கள் அவரவர் அறைகளுக்கு நகர, சிப்பந்தி உணவு தட்டுகளை அகற்ற உதவியவள், கதவைத் தாழிட்டாள். அந்த சூயிட்டில் இரு சிறிய படுக்கை அறைகள் இருந்ததால் பெரியவர் ஒரு கனத்த புத்தகத்துடன் அடுத்த அறைக்குச் செல்லியவர், தம்பி மகளை சற்று அழுத்தமாய் பார்த்தார்.

''என்ன அதி? உனக்குத் தூக்கம் வரலை போலியே...

''ரிஸப்ஷனிஸ்ட்டிடம் சொல்லி எதையேனும் கொண்டு வரக் கேட்கவா?''

''நியூஸ்- பேப்பரைப் புரட்டினால் போதும்... சீக்கிரம் தூங்கிடுவேன்... லைட்டைக்கு போடலாம்...?

''குட்- குட்- நைட்''

ஆனால் அது ஒரு நல்ல இரவாய் அவளுக்குக் கழியவில்லை. விதவிதமான கனவுகளும் கற்பனைகளும் கைகோர்த்தபடி வந்து அவளைத் தூக்கத்தில் மிதந்தவளை அச்சுறுத்தின... திடுக்கிட்டு அழவைத்து வேடிக்கைப் பார்த்தன! இனியும் பல நாட்களுக்கு அவளை நிம்மதியாய் தூங்கவிடப் போவதில்லை என்பதாய் எச்சரித்தன...

குழம்பிப் போன அதிதி போர்வைக்குள் குறுகி படுத்திருந்தாள்!

## 5

சிவந்த கண்களையும் வெளிறிய முகத்தையும் குளிர் நீரடித்துக் கழுவிய அதிதி, மேலாக கூந்தலைச் சீர்படுத்தி விட்டு பெரியப்பா ஊற்றி வைத்திருந்த காபியைப் பருகினாள்.

''என்னம்மா 'லாஃபோக்கு' உனக்கு ரொம்பப் போரடிக் காட்டியிருக்கா- பாதி ராத்திரி முழிச்சிருந்திருப்பே போலயா?''

''ஏனோ... தூக்கம் சரியா வரலை பெரியப்பா...''

''இத்தனைக்கும் நேற்று கடற்காற்றுபட ஒரு மணி நேரத்திற்கும் மேலே நடந்துட்டு வந்திலேடா? எனக்கு இப்போ கால் தயமங்குது. முக்கால் மணி நேரமேனும் நடந்தாத்தான் அடங்கும்... வா?''

நேற்றிரவு கருப்பாய் ஆடிய தென்னமரங்கள், இன்று காலை பச்சைக்கு நிறம் மாறியிருந்தன! நேற்று சற்று நிறைவாய் எழும்பிய அலைகள் இப்போது சிணுங்காய் புரண்டு கொண்டிருந்தன!

சுற்றிலும் பார்த்தவளின் பயம் சற்று நீர்த்தது. கூடவே பெரியவர்

நடக்கும் தெரு வேறு. அவர் கை வீசி நடக்க அதிதி கைகட்டியபடி அவருக்கு இணையாய் நடந்தான்.

"மெயின் கேட் வரைப் போகலாமில்லையா?"

அரைகிலோமீட்டருக்கு இருமருங்கும் தென்னைகள் நிழல் பாவிய நீளமான பிரதான சாலையில் நடப்பது அவர்களது பழக்கந்தான். குறுக்கும் மறுக்குமாய், தென்னைகள் விசிறி விடும் காற்றாட இரண்டு, மூன்று தரம் நடந்து விட்டால் உருவி விட்ட உற்சாகத்தில் உடலிருக்கும் நாள் முழுக்க.

முன்தினம் தன் நண்பர்களிடம் பெரியவர்தன்னை கருத்துக்களோடு அவர் அதிதியிடம் சொல்லியபடி நடந்த போது தான் அது நேர்ந்தது...

மிக வேகமாய் வந்த கார் ஒன்று மோதுவது போல இவர்கள் பக்கமாய் பாய, பதறி ஒதுங்கியவர்களை உரசியபடி பிரதான சாலையை எட்டி வளைந்து போன அந்த வாகனம்!

"முட்டாப்பய... நேத்து ராத்திரி குடிச்ச போதை இன்னும் விலகலை போல..." என்ற தேவாரத்தின் நெற்றி சுருங்கியது...?" அவன் வேண்டும்னே நம்மை உரசறாப்பல வந்தான்னு தோணலை அதி?"

மிக வெறுத்த அவன் முகத்தைப் பார்த்தவர்...

"விஷமத்தனம் தான்.... சில வேடிக்கைன்னு நினைக்கறது பல சமயம் வினையாய் முடிஞ்சிரும்... அது தெரியாமல் இப்படி ஆடறது..."

"பெரியப்பா நாம... ரூமிற்குத் திரும்பிடலாமா?"

"கேட்டவனின் தொனி அவரை உடனே சம்மதிக்கச் செய்தது. தளர்ந்த கால்களுடன் எப்படி அறைக்கு வந்து சேர்ந்தோம் என்று எண்ணியவன், அறைக்கு வந்து சேர்ந்ததுமே கதவைத் தாழிட்டு விட்டு "பெரியப்பா உங்களிடம் கொஞ்சம் பேசணும்" என்றான். ஒரு குவளை குளிர்ந்த நீரைப் பருகியவன் முடிந்தவரை தன் பதட்டத்தை மறைத்து நேற்றிரவின் நிகழ்வைக் கோர்வையாய் சொல்ல, பெரியவரின் முகத்தில் அப்பட்டமான அதிர்ச்சி!

"அதான் அப்படி சோர்ந்து தெரிஞ்சியோடா...? அப்ப இன்னைக்கு நம்மை... உன்னை உரசின கார்...? உன்னையும் கொல்ல முயற்சித்தாயா அல்லது அது ஒரு மிரட்டலா...? கடவுளே... அந்தக் கொலைகாரப் பாவிங்க அப்ப ராத்திரியெல்லாம் இங்கேதான் தங்கியிருக்கணும்... காலையில் கிளம்பற நேரம் மறுபடி உன்னை உரசிக்கிட்டுப் போயாச்சு..."

எம்பா உங்மகளுக்கு கல்யாணம் முடிஞ்சி 5 வருடம் ஆச்சு... இப்பதான் தல தீபாவளிக்கு கூப்பிட்டு போறதா சொல்ற?

கல்யாண முடிஞ்சதுல இருந்து இவ்வளவு நாளும் எங்க வீட்லதானே இருந்தா. இப்பதான் அவங்க வீட்டுக்கு போயிருக்கிறா.





"ஸாரி பெரியப்பா, நேத்தே உங்க கிட்ட சொல்லியிருக்கணும்... அப்ப கொஞ்சம் நிம்மதியாய் தூங்கியிருக்கக் கூடும் நான்... அந்த ஜீவா அப்பவே தான் சென்னை கிளம்பறதாய் சொல்ல, இனி ஆபத்தில்லைங்கற நினைப்பில் விட்டுட்டேன்..."

பெரியப்பா தன்னைக் கடிந்து கொள்ளாதது அதிதிக்கு நிம்மதியாயிருந்தது. இந்நிலையில் அவரும் தன்னைக் கடிந்து பேசியிருந்தால் மேலும் சோர்ந்திருப்பான்.

"இருட்டிலே அவங்க பின்னால் நின்ற நீ அவங்க முகத்தைப் பார்த்திருக்க முடியாதேடா...?"

"இல்லை... ஆனால் ஜிம்மின் உள்ளே பிரகாசமான வெளிச்சத்தில் அவங்க நின்னப்போ... முழுசாய் நான் அவங்களைப் பார்க்கலைன்னாலும்... அவங்க சாயல் ஞாபகமிருக்கு பெரியப்பா..."

"அதான் அவங்க பயம்! நீ அவங்களைக் காட்டிக் கொடுத்திருவியோங்கற கலக்கம்! அதான் இப்படி மிரட்டிட்டுப் போறானுங்க. வாயைத் திறந்தால் விளைவுகள் மோசமாயிருக்கும்னு... ஆனா... எனக்கு பெருமையாய் இருக்குடா... நீ அத்தனைத் துணிவா அங்கே நுழைஞ்சு அந்த... பெயரென்ன ஜீவாவா?... அவரைக் காப்பாற்றினதை நினைச்சு. பாவம் பிள்ளைக் குட்டிகளுள்ள குடும்பஸ்தன்... அவரை அந்த ஜீவாவைப் பார்த்தால் எப்படியிருந்தது? வில்லங்கமான ஆள் போலவா?"

"நோ பெரியப்பா- ஒரு ஜுக்ட் வெரி லவ்லி... அவரும் கொஞ்சம் கலங்கிப் போய்தான் தெரிஞ்சார்- சொன்னேனே... உங்களிடம் வந்து நன்றி தெரிவிக்க அவருக்கு ஆசைதான்... ஆனா உடனே சென்னை கிளம்புவதாய் சொன்னார்.

அதிதியின் உடல் லேசாய் வெளிர்த்தது.

"இப்ப நாம என்ன செய்யணும் பெரியப்பா?..."

"யோசிப்போம்..."

அவர் தொடர்வதற்குள் கதவு தட்டப்பட்டது!

சிப்பந்திகளின் பணிவான தட்டல் அல்ல அது. வெளியே அழைப்பு மணியும் உண்டு. அதை விடுத்து இப்படி அதிகாரமும் அவசரமுமாய் கதவைத் தட்டுவது யார்...?

அவனையும் மீறி அதிதி எழுந்து நின்றான்-

அவனை பக்கத்து அறைக்குப் போக சைகை காட்டிய தேவாரம், கதவை நோக்கி நடக்க, அதிதிக்கு நடுங்கியது.

"வேண்டாம் பெரியப்பா...." கெஞ்சினான்.

"ஒரு ரூம்பாயை வரச் சொல்லிட்டே கதவைத் திறக்கறேன். நீ உள்ளே இரு" என்றவர் போனை எடுக்க, அவன் அவர் சொன்னபடி செய்தான்.

மறுபடி கதவு தட்டப்பட்ட சத்தம்!

அதற்கு பதிலளிப்பது போல பலக்கத் துடிக்க ஆரம்பித்தது இவன் இதயம்! இரண்டு நிமிஷங்களில் கதவு திறக்கப்பட்டு, அதைத் தொடர்ந்தன பேச்சுக் குரல்கள்.

இறுகிய உடலுடன் கதவருகே கவனித்தபடி நின்றான் அதிதி.

"நல்லா என்ஜாய் பண்ணிவிட்டு வா" என்று வாட்ச்மேன் அனுப்பி

வைத்து ஹாஸ்பிடலுக்கு வந்தது. உயிரோடு திரும்ப முடியுமா தான்?

இது பத்தி யாரிடமும் எதுவும் சொல்லாமலிருந்தால்.... ஒரு வேளை தன்னை பிழைத்துப் போக விட்டு விடுவார்களோ?

இல்லை இவன் உயிரோடு இருப்பான் என்ற உதறலில் அந்தக் கூலிப்படையை நீலக் கத்தியைக் கொண்டு தன் உயிரையும் போக்கி விடுவார்களா?

இவனது அனுமதியை வெளிசத்திட்டபடி... அதிலும் கூட இவனுக்கு தூக்கி வாரிப் போட்டது.

"அதிதி... நான்தான் - கதவைத் திற."

தாழ் விலக்கி கதவை விரித்தாள். முன்னறையில் அமர்ந்திருந்தவனைப் பார்த்தவளின் விழிகளும் விரிந்தன...

தனது வீட்டில் அமர்ந்திருப்பது போல ஒரு இயல்பான கம்பீரத்துடன் அங்கே இருந்த புதியவன் யார்...?

கேள்வியுடன் பெரியப்பாவைப் பார்த்தாள்.

"வாம்மா - இது... நேற்று நீ காப்பாற்றிய ஜீவாவின் தம்பி."

இவளைப் பார்த்தவன் அழுங்காமல் எழுந்து நின்றான் - கைகுவித்து ரொம்ப நன்றி அதிதி. நான் அக்ஷய்" என்றவனின் நீண்ட விரல்களையும் தன்னை ஊடுருவிய அவன் கண்களையும் பார்த்தபடி நின்றாள்.

"தம்பி - அதிதி இன்னும் நேற்றைய அதிர்ச்சியிலிருந்து விடுபடலை. தவிர இன்னைக்கு காலைல வேற ஒரு கார் - அவளை மோதறது போல உரசிப் போனது. அதிலிருந்து ரெண்டு ஆண்கள் - ஆக அது அந்த கொலையாளிங்க வேலைதானோன்னு என் யூகம்."

"பயங்கரமான அனுபவம்தான்... ஆனா அதிலும் துணிஞ்சு அண்ணனைக் காப்பாற்றிய உங்களுக்கு எங்க குடும்பமே ரொம்பக் கடமைப்பட்டிருக்கு..."

இன்னும் அதிதியால் பேச முடியவில்லை. நேற்று சந்தித்த ஜீவாவிற்கும் இந்த அக்ஷயாவிற்கும் தோற்றம் அத்தனை ஒத்துப் போகவில்லையே என்ற ஆராய்ச்சியிலிருந்து அவள் புத்தி!

ஜீவா நடுத்தர உயரமும் வெளுப்புமானவன் என்றால் இவன் மாநிறத்தில் வெகு உயரமாயிருந்தான். இத்தனைக்கு ஜீவாவிற்கு பிசிறில்லாத பளபளப்பான தலைமுடியா?

அவரது முகம் சாதாரணமானது... இத்தனை வசீகரமானதல்ல- ஆனால் உட்கார்ந்திருந்த தோரணையில், எழுந்து கை குவித்த விதத்தில், குரலில் மிக நாகரீகமாய் தோன்றும் இவர்... கொலையாளியின் கையாளா?... சே! சே... இருக்க முடியாது.

ஆனாலும் அந்த நீண்ட விரல்கள் சட்டென ஒரு கத்தியையோ, துப்பாக்கியை உருவி நீட்டி விடுமோ என்ற அச்சமும் அவளுக்கு நீங்கவில்லை!

"நான் பேயில்லை" புன்னகைத்தான் புதியவன் - "அதாவது அரண்ட கண்களுக்கு எல்லாம் பேயாகத் தெரியுமாமே - ஆக நான் கொலையாளிகளின் கூட்டாளி இல்லை."

என்றவனின் கண்களில் கேலி இல்லை - அவை கனிந்திருந்தன. ஒரு சின்ன பெருமூச்சுடன் கை குவித்தவள் அவனை உட்காரச் சொல்லும் விதமாய் கை காட்டினாள்.



"அண்ணன் நேத்திரவு சென்னை வந்து, எல்லாம் என்னிடம் சொன்னாங்க. உங்க பெரியப்பாவின் பெயர், தங்கிய அறை நம்பர் எல்லாம் நீங்க சொல்லியிருந்தால் கௌரிட்டுள் எம்.டி.வில்லா.சோமநாதனிடம் அது பத்தி பேசி தெளிவுபடுத்திட்டேன்."

"தம்ப சோமுவை இவங்களுக்குப் பழக்கந்தானாம்டா அவனும் இங்கதானே இருக்கான்? அவனிடமும் போன் பண்ணி பேசிட்டுதான் உன்னை வெளியே வரச் சொன்னேன்."

"இவ்வளவு பயப்படற போலிக்கற நீங்க, அந்தளவுத் துணிச்சலாய் அண்ணனைக் காப்பாற்றியதுக்கு... மறுபடி நாங்கள்."

"குருட்டு தைரியம்னு நினைச்சேன். அது கடவுள் தந்த துணிச்சல், உங்கண்ணனுக்கு எதும் நேரக்கூடாதுன்னு இருந்திருக்குது."

சிறு குரலில் பேசியவளை ஆர்வமாய் பார்த்திருந்தான். அவன் பார்வையின் கூர்மை அவளுக்குக் கூசியது. ஏனோ கன்னமும் காதுமடல்களும் சூடாகி படபடத்துடன் தலை கவிழ்ந்தாள், அதிதி.

"உங்களுக்குத் திருப்தி தம்பி - ஆனா எனக்குத்தான் அதிருப்தி. நான் வெளிநாடு போயிடலாம்னு தயாராகிட்டிருந்தேன்... ஒரு பழைய பிரண்ட பல வருஷங்களுக்குப் பிறகு பார்க்கலாம்னு... ஆனா அதைக் கேன்சல் பண்ணிடறதும்... ஆனா தம்பி... அதை விட நெருடலான விஷயம் அதிதிக்கு எதும் ஆபத்து வந்திடுமோன்றதுதான்... நான் இங்கேயே எப்போதும் கூடவே இருந்துடலாம்னாலும் அதொன்னும் பெரிய பாதுகாப்பில்லையே! நான் வயசானவன்... இவளோ காலேஜ் ஹாஸ்டல்ல தம்பகாரிகளதான் போறது வாறதுன்னாலும்..."

அக்ஷய் இடைமறித்தான்

"நீங்க எதற்கும் பயப்பட வேணாம்க்கா"

"அதெப்படிப்பா. கொலைக்கும் அஞ்சாதவங்க..."

இப்போது அதிதி இடையே பேசினாள்

"நான் அவங்களைக் காட்டித் தந்திடுவோன்றது தானே அவங்க பயம்? நான் நடந்ததை முழுக்க மறந்துடறேன்" மறந்தும் அது பத்தி... அதாவது நேத்திரவின் கொலை முயற்சியைப் பத்திப் பேசப் போறதில்லை"

"அக்ஷய் மெல்ல ஆனால் அழுத்தமாய் தலையசைத்தான்-

"தப்பு அதிதி... நீங்க அந்த ரெண்டு பேரை அடையாளம் காட்டணும்னு கேட்கத்தான் நான் இத்தனை அவசரமாய் இங்கே வந்தேன்"

6

'உண்மை என்பது ஒங்கி ஒலிக்கும் கண்டா மணியைப் போல... ஆனால் பல சமயம் மனசாட்சி எனும் அதன் நாக்கு இழுத்துக் கட்டப்பட்டிருக்கிறது..." இப்படியெல்லாம் ரொம்ப அழகாய்த்தான் அந்தப் பையன் அக்ஷய் வாதம்

செய்தான். ஆனால் மகளுக்கு ஆபத்து என்று வர, அந்த மனசாட்சியை சற்று வெளிப்படுத்தத்தானே வேண்டியிருக்கிறது?

சுவ்வு தாழ்ந்ததனை மெல்ல ஆட்டியபடி யோசித்த தேவராம், தன் எதிரே வந்து உட்கார்ந்த அதிதியைப் பார்த்தார்.

ஏற்கனவே சற்று ஒடிசலான உடல்வாகுள்ள அதிதி இந்த இரண்டு நாட்களில் மேலும் மெலிதாய் தெரிந்தாள். 'பளிச்' ஆரஞ்சு நிற உடை அவளது சருமத்தை மேலும் வெளுப்பாய் காட்டியது. திடும்மென்று ஒலித்த செல்போனைக் கூட அவள் சற்று வினோதமாய் பார்த்திருக்க, தேவராம் எடுத்தார்.

'ஹலோ' என்பதைத் தொடர்ந்து அவர் பேசியதை அதிதி சற்றுக் கலவரத்துடனேயே கேட்டிருந்தாள். அவர் பேசி முடித்ததும் ''யாரு பெரியப்பா?'' மெல்ல கேட்டாள்.

ஆனால் பதில் ஓரளவு அவள் யூகித்தேயிருந்தாள்.

''அந்தப் பிள்ளை அக்ஷய் தான்டா... அவங்க அப்பா, அம்மாவோடு இப்ப இங்கே, நம்ம வீட்டுக்கு வர்றாங்களாம்.''

அவர்கள் வந்து சேர்ந்த ஐந்தாவது நிமிடமே பலகாரம், பழரசத்தை விருந்தினர்க்குப் பரிமாறினாள்.

''உட்காருங்க, உங்களைப் பார்த்து மனமார நன்றி தெரிவிக்கத்தான் நாங்க வந்தோம்...''

''அதான் போனிலேயே பேசினீங்களே...''

''உடனே சொன்ன நன்றி அது. இப்போ முறையாய் செய்ய வந்தோம்.'' என்றவர் தன் மனைவியைப் பார்க்க அவர் கொண்டு வந்திருந்த சில பரிசுப் பொருட்களை அழகாய் ஒரு தட்டில் வைத்து நீட்டினார்.

''ஏதோ கடமைக்காக நாங்க தர்றோம்னு நினைக்கக் கூடாதும்மா அதிதி. நன்றியை வேற எப்படிக் காட்டணும்னு தெரியாமல்... நீ இளம்பெண்ணாய் இருக்கறதால புடவை, நகைன்னு எனக்குத் தெரிஞ்ச வரையில் வாங்கினேன்...''

''ஐயோ.. இதெல்லாம் வேண்டாங்க. இந்தப் பூவை மட்டும் எடுத்துக்கறேன்.''

வந்தவர்களின் முக வாட்டம் கண்ட தேவராம் சைகை செய்தார்.

''புடவையை எடுத்துக்கோம்மா..''

எல்லார் கண்களும் தன் மீதிருந்த சங்கடத்தில் தட்டை வாங்கிக் கொண்ட அதிதி, ''உள்ளே வாங்கம்மா'' என்றபடி உள்ளறை நோக்கி நடக்க ஜீவாவின் தாயாரும் அவளைப் பின் தொடர்ந்தார்.

அனைத்தையும் கூர்மையாய் கவனித்திருந்த அக்ஷயின் கண்ணிலிருந்து தப்பவே அதிதி உள்ளே ஓடியது. அது மரியாதைக் குறைவாய் படுமோ என்ற தயக்கத்தில்தான் பெரியவரையும் உடன் சேர்த்துக் கொண்டது.

ஆனால் உள்ளே அந்த அம்மையாரிடம் அவள் இயல்பாய் பேச முடிந்தது.

''நா பெருசா எதுவும் செஞ்சிடலைம்மா..'' என்று ஆரம்பித்தவளை தடுத்து மறுபடி ஜீவாவின் தாய் நன்றிகளைச் சொல்ல, ''சேலையும்



விலை உயர்ந்ததாய் படுது.. நகையின் விலை..''

''எம்மகனின் உயிருக்கு விலையிடக் கூடுமாம்மா?... அதே போலத்தான் உன் தைரியமும் நியாயமும். விசாரிச்சதுல ஜீவாவைக் கொல்ல ஏதோ சதி நடந்திருக்குது தான்..'' பட்டுச் சேலையின் முனையால் கண்களைத் துடைத்தவர்.

''ஏற்கனவே மூத்தவன் வாழ்வு கோணலாயிடுச்சு. அது போதாதுன்னு இதை முழுக்க அழிக்க நினைச்சா எப்படி?'' என்றது அதிதிக்கு முழுக் குழப்பம்.

ஆனாலும் முன்பு தான் அத்தனையையும் தப்பர்த்தம் செய்து கொண்டோமோ அத்தனை எளிதா ஒரு உயிரை அழிப்பது என்ற குழப்பம் மட்டும் ஒரு முடிவிற்கு வந்திருந்தது. ஆக ஜீவாவின் கொலை முயற்சி உண்மை. அதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்கிறது.

''ஜீவாவின் நல்ல காலம் அந்தப் பக்கம் நீயிருந்தே... மற்றபடி எத்தனை உயிர்களை அந்தப் பாதகனுங்க உருவி அழிச்சாங்களோ?''

அந்தத் தாய் எல்லா உயிர்களுக்காகவும் கரிசனப்பட... அதிதிக்கு அக்ஷய் சொன்னது சரிதான் என்று தோன்றியது.

சம்பவத்தின் மறுநாள் காலையே இவர்களைத் தேடி வந்தவன், நன்றி சம்பிரதாயத்தோடு நிறுத்தாமல் தெளிவாய் சொல்லி விட்டான்.

''கொலையாளிகளை நீ அடையாளம் காட்ட வேண்டும்.' என்று. இவளுக்கு அந்த வேண்டுகோள் மிரட்சி என்றால் பெரியப்பாவிற்கு அதிர்ச்சி.

அவன் விடவில்லை.

'கண்டு பிடிக்க ஜெயிலில் அடைக்கப்பட வேண்டிய அந்த கொலைகாரர்கள் வெளியே சுற்றுவது பல உயிர்களுக்கு ஆபத்தில்லையா?''

''இருக்கலாம்ப்பா... ஆனா இதில் அதிதிக்கு ஆபத்திருக்கே.''

''போலீஸ் உதவி கமிஷனர் எங்க குடும்பத்திற்கு தெரிஞ்சவர். அவரிடம் விவரம் சொல்ல, விசாரணையை மிக ரகசியமாய் வச்சுக்கலாம்னார். முதல்ல குற்றவாளிகள், இது போன்ற குட்டி தாதாக்களின் போட்டோஸ் உள்ள ஆல்பத்தை அதிதி பார்க்கட்டும்.. அவங்க யாருன்னு பேசியதைப் பார்த்தால் பெரிய லெவல் கொலையாளிகளாய் தோன்றலைன்னார்....''

''இந்த மாதிரி ஆட்களோட விளையாடக்கூடாது தம்பி. பிரச்சினையை விலைக்கு வாங்கறது போல அது.'

'பிரச்சனையை வேரோடு பிடுங்கிடலாம்னேன். இல்லைனக்கு அந்த கார் உரிமையில் நீங்க மேலும் நடுங்கறீங்க.

'ஆக கொலை செய்யத் துணிஞ்சவங்களை நாம வெளியே விட்டு வைக்கவே கூடாது லார். அதிதி, நீங்க முதல்ல போலீஸ் வருமுன்ன ஆல்பத்தைப் பாருங்க.... அதில் அந்தக் குற்றவாளிகளின் படங்கள் இல்லைன்னா வேறு சிலரை கமிஷனர் ஆபிஸ்க்குக் கூட்டி வந்து உங்களை மறைவான ஒரு இடத்திலிருந்து அவங்களைப் பார்க்க ஏற்பாடு

பண்ணிடலாம்.''

''அதோடு நிற்காதே தம்பி. சாட்சி சொல்ல பொண்ணு வரவேண்டியிருக்கும். இது மாதிரியான கூட்டத்திற்கு செய்திதான் தந்திருக்கும் பேர் 'கலிப்படை.' அதற்கு தலைவன், தளபதி எல்லாம் உண்டாம். ஆக அந்த மற்றவங்களால் அதிதிக்கு ஆபத்து வந்தால்...?''

அக்கவின் முகம் சோர்ந்ததைக் காண இவனுக்குப் பொறுக்கவில்லை. ''நாட நான் அடையாளம் காட்டலாம்.. ஆனா அதில் ஒரு பிரச்சினை.'' அவன் கண்கள் நெறு நம்பிக்கையோடு சொன்னவளில் பதிந்தன.

'அவங்க நின்றது நல்ல இருட்டில். நான் நின்றது அவங்களுக்குப் பின்னால்.. நான் தெளிவாய் கேட்டது அவங்க குரலைத்தான்...'

அத்தோடு முடிந்த பேச்சு, பிறகு தொடரவில்லை என்றாலும் இவனைச் சுற்றி சீக்கிரித்தது.

இவன் எதிரேயிருந்த ஜீவாவின் தாய் இவனையே பார்த்திருந்து விட்டு, தட்டில் வைத்திருந்த புடவையை எடுத்துப் பிரித்தார்.

''எங்க அக்கம் உன்னை ரொம்ப கச்சிதமாய்த் தான் வர்ணிச்சிருந்தான், வெறுப்பாயிருக்கறவங்களுக்கு அடர்த்த நிறங்கள் தான் நேருன்னு தெற்கத்திக்காரங்களுக்கு ஒரு தப்பான அபிப்பிராயம். இப்ப இந்த ஆரஞ்ச கூட உன்னை சோபையாய் காட்டுது.'' என்றபடி சேலையை அதிதியின் இடது தோளில் வழிய விட்டவர்.'

''அடடா... இந்த சேல உனக்குன்னே நெய்ததுடா.. பாரேன்.'' இளையவளை அவர் திருப்பி நிறுத்த, அங்கிருந்த முழுக் கண்ணாடியில் பட்டுப்புடவையில் வழிந்த அதிதி ஒரு பசுங்கொடி போல மிளிர்ந்திருந்தாள்.

அது மாந்தளிர் நிறப்பட்டு விளிம்பில் சன்ன செப்போடு ஜரிகை வளைவுகள், உடலெங்கும் தங்கப் புட்டாக்கள். மூத்தவள் கண்ணேறுக்கான நெட்டி முறித்ததில் அதிதியின் கன்னங்கள் சிவக்க, மேலும் சோபித்தாள்.

''பிடிச்சிருக்காம்மா அதிதி....?''

''ரொம்ப நல்லாயிருக்கும்மா...''

''இது எங்க நன்றிப் பெருக்கைக் காட்ட ஒரு வழி.. அவ்வளவு தான். பாவப்பட்டியலின் முதலிடம் நன்றி மறப்பதற்குதானாம். எங்க தாத்தா எச்சரிப்பார்.

'நன்றி கெட்டவனுக்கு நன்மை செய்வதும் கடலுக்குள் பன்னீரைத் தெளிப்பதும் ஒன்னுன்னுவார். ஆனா மனுஷங்க நன்றி பாராட்டுறாங்களோ இல்லையோ, நல்லது செஞ்சவங்களுக்கு ஆண்டவன் அருளிருக்கும். தென்னைக்கு விட்ட நீர் இளநீராய் கிடைப்பது போல. இதெல்லாம் என் ஆசைக்கு என்ற அந்த தாய் அதிதி நெகிழ்ந்து நின்ற வாய்ப்பைப் பயன்படுத்தி எடுத்து வந்த தங்க வளையல்களையும் அவளது கைகளில் நுழைத்து விட்டார்.

தன் தாயின் நினைவு அழுத்த இளையவளும் மறுக்கவில்லை.



''தலைமகளை நூர்... ... ... ...'' தாம் இவன் பதிலுக்கு காத்திராமல், பிருதுவாய் கிக்கெடுத்து, பின்னலிட்ட தோல் அவர்களிடையே பேச்சு மேலும் இயல்பானது..

''எனக்கு மூத்தது ரெண்டு பேரும் பசங்க. ரொம்ப ஆசைப்பட்டுத் தெடச்ச பொண்ணு அகல்யா. எங்கம்மா பெயரையே அவளுக்கு இட்டோம். அவளுக்கும் இப்படித்தான் பட்டாட்டம் நீள தலை முடி. எங்கிட்ட தலையைத் தந்திட்டு நாவல் வாசிக்கிறது அவளுக்குப் பிடிக்கும்.''

''அவங்க படிக்கிறாங்களா?''

''மேலே, மேலே படிப்பேன்னு அடம் பிடிக்கறதால். ஆனா பிரபாகர் வீட்டிலேருந்து அவளைப் பெண் கேட்டு வந்து, இவ பிரபாகரைப் பார்த்ததும் கல்யாணத்திற்குச் சம்மதிச்சுட்டா.. இப்பப் பேரனும் பிறந்தாச்சு.. ஆறு நாள்தான் ஆச்சம்மா... இல்லைன்னா விவரம் கேட்ட மறுநாளே உன்னைத் தேடி வந்திருப்பேனேடா'' வாஞ்சையாய் கைப்பற்றிக் கொண்ட மூத்தவளிடம், விவரம் கேட்க யோசிக்கவில்லை அதிதி.

''ஏற்கனவே உங்களுக்குப் பேத்தியும் இருக்காள்வியா? அதாவது ஜீவாண்ணாவின் மகள்?''

மூத்தவரின் பிடி இறுகியது.

''ஆமாண்டா. நீ அந்த நேரம் துணிஞ்சு செயல்படலைன்னா இந்த நேரம் என் சின்ன ஜனனி தகப்பனையும் இழந்து முழு அனாதையாகி இருப்பா..''

''என்னம்மா சொல்றீங்க? ஜீவாண்ணாவின் மனைவி...?''

''உயிரோடு இல்லம்மா. ரெண்டே நாள் வசித்து வலியில்லை. இறந்துட்டா. இப்போ யோசிச்சா, இந்தப் பாதகனுங்களே அவளைக் கொன்னிருப்பாங்களோன்னு படுது... டாக்டர் பிரேத பரிசோதனை பண்ணி இறப்புக்கான காரணத்தை கண்டுபிடிக்கனும்னு சொன்னப்போ, நாங்க மறுத்துட்டோம். செத்தப்பெண் உடம்பை அலங்கோலப்படுத்தனுமான்னு.. ஆனா இப்ப யோசிச்சா, அதை மனசை இறுக்கிட்டு செய்திருந்தால் இதுவரை வந்திருக்காதும்.

''யார்.. கொலையாளின்னு நினைக்கறீங்க?''

''சந்திரிகாவின் அண்ணன்மார்தான். சந்திரிகா ஜீவாவின் மனைவி அவளாக தேடிக்கிட்ட பொண்ணு அவ. விசாரித்தில் அவ குடும்பம் சரியில்லைன்னு காதில் விழுந்தது. அவ அண்ணனுங்க செய்யாத அக்கிரமமில்லையாம்.

ஆனா நாங்க எச்சரித்ததை ஜீவா எடுத்துக்கலை. என் சந்திரிகா நல்லவ. அது போதும்னுட்டான். அந்தப் பொண்ணை தங்களின் திட்டத்திற்கு வளைக்க அண்ணன்மாரால் முடியலை.. அந்த ஆத்திரத்துல மருந்து வச்சிட்டாங்க போல..''

'தங்கையையே கொலை பண்ணுவாங்களா?''

''பணம் தான், பிள்ளையையே பகையாக்கிடுதேம்மா. நிழல் பேப்பரில் வர்ற செய்திகளையெல்லாம் பார்க்கிறோமே? ஒரு வேளை சும்மா மிரட்டலாம்னு நினைச்ச காரியம் சந்திரியின் உயிரையே முழுங்கியிருக்கலாம். தொடர்ந்து ஜனனியின் அதாவது என் பேத்தியின் கண்டிப் கேட்டு அந்த அண்ணங்க கேஸ் போட்டாங்க. நான் இறந்த அந்த சூழல் அதாவது எங்க வீட்டுச் சூழல், அந்த சின்ன மகளுக்குப் பாதுகாப்பானதில்லைன்னு... ஆனா அது சரி வரலை.''

''ஜனனியின் மூலம் உங்க சொத்தை அடையலாம்னு நினைக்கிறாங்களா?''

''பொறுப்பைக் கெடுக்கிற நிலைப்பு! ஜீவா, முக்கியமாய் அக்ஷய், அவங்களுக்கு இடந்தராததால் இந்தக் கொலை முயற்சியோன்னு தோணுது. இப்ப வேறும் தூக்கிறதையாய் ஜனனியை கவனிக்கிறோம். பாவம் இப்படி ஒரு சூழலில் தாயில்லாம வளரணுங்கறது அவளுக்கு விதிச்சிருக்குது...'' முகம் தெரியாத ஒரு குட்டிப் பெண்ணிற்காய் அதிதியின் மனம் வருந்தி இளகியது....

# 7

''எல்லாத்துக்கும் ஈடுபாடுதான் காரணம். அது உங்களிடம் இருந்தால் எதுவும் சுலபம். ஈடுபாடு இல்லாமல் சாதனை சாத்தியமில்லை.'' என்று எடுப்பாய் அந்த டி.வி. பேச்சாளர் ஆரம்பிக்க, கைவேலையாயிருந்த அதிதி அந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியை கவனிக்கலானாள்.

'துரோணாச்சாரியாரின் மகன் அஸ்வத்தாமனுக்கு வருத்தம். தன் தந்தை தன்னைப் பிரதான சீடனாய் ஏற்காமல் அர்ஜுனனுக்கு அந்த கவுரவத்தை தந்து விட்டாரேயென்று.

அதைத் தந்தையிடமும் சொல்ல துரோணாச்சாரியாரின் பதிலைக்கிறார். 'அஸ்வத்தாமா, அர்ஜுனனைவிட உனக்கே நான் அதிகம் கற்றுக் கொடுத்தேன். நாராயண அஸ்திரம் பற்றி அவனுக்கு சொல்லாததை நான் மகன் என்பதால் உனக்கு அந்த வித்தையைக் கற்பித்தேன். அந்த சுயநலத்தினால் தான் எனக்கு 'பேஷ்' என்ற அந்தஸ்து கூட வாய்க்கவில்லை. ஆக என்னைப் பழி சொல்லாதே.'

'அப்படியென்றால் அதிக விவரமும், திறமையும், அர்ஜுனனுக்கு எப்படி வாய்த்தது?' என்று விடாமல் மகன் கேட்க,

'அது அவன் ஈடுபாட்டினால்! கவனத்தை ஒரு முகப்படுத்தி கற்கும் எந்தக் கலையிலும் ஒருவன் சிறப்பது சாத்தியம்தானே? உங்களுக்கு நான் பாடம் எடுப்பதை ஒளிந்திருந்து கவனித்த ஏகலைவன்.. உங்கள் எல்லாரையும், அர்ஜுனனையும் விட... என் என்னையும் விட சிறந்தவன்' என்கிறார் துரோணாச்சாரியார்.

கைவேலையை நிறுத்திய அதிதி, புருவம் சுருக்கி யோசிக்கலானாள்... ஒளிந்திருந்து கவனித்த' என்று இப்போது கேட்ட வார்த்தைகள் அல்லது முன்தினம் தன் பெற்றோரோடு வீடு வந்த அக்ஷய்



சொன்ன 'கொஞ்சம் கவனமாய் நினைவு படுத்தினால் உங்களுக்கு அந்த கொலையாளிகளின் முகம்... இல்லாவிடினும் சாயல் ஞாபகம் வரும்னு தோணுது. அதிதி... பிளீஸ் ஈடுபாட்டோடு முயற்சி செய்து பாருங்களேன்.' என்ற வேண்டுகோள்.. அவளது சிந்தனையை ஒருமுகப்படுத்தியது.

இருட்டில் என்றாலும் கொலை பற்றி பேசிய இருவரது பக்கவாட்டு முகம் அவளுக்கு தெரிந்ததே. தவிர, துணிந்து உடற்பயிற்சி கூடத்திற்குள் நுழைந்த போது, அவளது அனைத்துப் புலன்களும் மிகக் கூர்மைப்பட்டிருந்தன. ஓரப்பார்வையிலே அந்த இருவரையும் பார்த்ததில் தன்னில் பதிவாகியிருந்தது என்ன...? ஈடுபாட்டோடு யோசித்தாள்.

ஒரு தாயற்ற சிறுமி தகப்பனையும் இழந்து விடக்கூடாது. என்ற தவிப்புடன் புத்தியை விரட்டினாள். புலன்களில் மிகத் தீர்க்கமாய் பதிந்திருந்தது அவர்களின் குரல்!

படிப்போ, பண்போ பகிப்படுத்தாத பேச்சுதான்...

ஆனால் வெவ்வேறு விதமான பேச்சுமுறை தெந்நியைச் சுருக்கி ஞாபக அடுக்குகளை அழுத்தினாள்.

இருவருக்குமே நல்ல தலை முடி. சென்னைத் தமிழ் பேசியவன் சற்று குட்டையும் தலுக்லும் தெற்கத்திய தமிழ் பேசியவன் உயரமும் அகலமுமாயிருந்தான்.

இருவருமே கருப்புமில்லை, வெளுப்புமில்லை.

அவர்களது உடைகளையும் நினைத்துப் பார்க்க, மொத்த சாயல் ஓரளவு பிடிபட்டது.. அதை தழுவ விடாமல் பிடித்து வைத்தாள்.

நன்றி பெருக்கில் தனக்கு நகைவிட்ட தாயை நினைத்தாள் அவர் மகனான ஜீவாவை தான் காப்பாற்றியது அரைகுறை வேலையாய் போகக்கூடாது. குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதிலும் ஓரளவு கைகொடுத்தால் தான் அது நியாயம்.

முடிந்தவரை அதை ரகசியமாய் வைத்துக் கொள்வதாய் உயர்நிலை காவல் அதிகாரிகள் சொன்ன பிறகும் இவள் ஏன் அஞ்ச வேண்டும்...?

தன் குடும்பத்தின் நிமித்தம் இவளுக்கு ஆபத்து வர, நிச்சயம் அந்த அக்ஷய் விட மாட்டான்.

'அடடே!' காவல்துறையை விட அக்ஷய் மீது அத்தனை நம்பிக்கையா? என்று ஒரு பக்க மனசு இடிக்க, சற்று அசட்டுதனமாய் சிரித்துக் கொண்டாள். தனக்குள்ளாகவே!

அன்றிரவு உணவு வேளையில் தான் செய்த முடிவைப் பற்றி, அதாவது மனமாற்றத்தைப் பற்றி பெரியப்பாவிடம் சொல்ல, அவர் குழம்பினார்.

''அதும் தெரியாத ஆபத்தும்மா இதில் நாம காவல விட வேண்டாம்னு நினைக்கிறேன்.''

''அந்த ஜீவாவின் மகள் பேர் ஜனனியாம் பெரியப்பா. அம்மா இல்லாத பொண்ணு பாவம்... அப்பாவுக்கும் ஆபத்துன்னா...?''

''அந்த ஜனனி அவ சித்தப்பா, அக்ஷயிடம் வளர்ந்துட்டும் போறது.'' அதைக் கேட்ட, அதிதியின் கண்கள் கலங்கி விட்டன.

''நல்லதையே நினைப்போமே பெரியப்பா.''

அவர்கள் உணவு முடித்து கை கழுவுவதற்காகவே காத்திருந்தது

போல வாசல் மணி அழைத்தது.

பணியாளரை மேஜையை ஒதுக்கச் சொல்லிவிட்டு வாசலைத் திறந்த அதிதி சற்று திகைத்துதான் விட்டாள்.

உயரமான அக்ஷயின் இடக்கையைப் பற்றியபடி தன்னை அண்ணாந்து பார்த்த அக்குட்டிப் பெண்ணைப் பார்த்து முறுவலித்தாள்.

''நீதான் ஜனனியா?''

''ம்ம்... உங்களுக்கு எப்படித் தெரியும்?

''உனக்கு ஆயுசு நூறு''

''அப்டின்னா?''

''உன்னைப் பற்றி இப்பதான் இந்த ஆன்ட்டி பேசினாங்களாம்'' என்று விளக்கியபடி ''உள்ளே வாங்க'' என்றழைத்த அதிதியைத் தொடர்ந்தான் அக்ஷய்.

''என்ன பேசினீங்க?'' அந்த குட்டிக் குரல் ஆவலாய் கேட்க, அதிதிக்குத் தொண்டை அடைத்தது.

'நீ அநாதையானபின் உன் கதி, கதை என்ன என்பது பற்றிப் பேசினோம்' என்றா?

''உன்னைப்... பார்க்கணும்னு பேசினோமம்மா''

''பார்த்தியா ஜானு.. உனக்குத் தோன்றியது போலவே இந்த... ஆன்ட்டிக்கும் தோணியிருக்குது''

இப்போது அதிதிக்கு மூக்கிலும் நமநமத்தது!

கண்களைக் கண்ணீர் நிரப்பி விடக் கூடாது என்பதற்காய் பல்லைக் கடித்தபடி வந்தவர்களை உபசரித்தாள். பெரிய சோபாவில் துள்ளூண்டாய் தெரிந்த அக்குட்டிப் பெண் கை குவித்து, ''ரொம்ப தாங்க்ஸ் ஆன்ட்டி... எங்கப்பாவைக் காப்பாத்துனதுக்கு'' என, அடங்காமல் இவளது கண்கள் நிரம்பின.

ஆனால் சற்று கோபமாகவே அக்ஷயை வெறித்தாள்.

''வீடு முழுக்க அதேப் பேச்சு- முதல்ல ஜீவா, அப்பா, அம்மாவிடம் சொல்ல, பிறகு அம்மா என் தங்கையிடம் சொல்ல, அவ... போனில் அவளது வீட்டுக்காரரிடம் விளக்க... ஆக ஜனனிக்குத் தெரிஞ்சு போச்சு. அதுவும் உங்களை வந்து பார்த்து வீடு திரும்பின அம்மாவுக்கு உன்னை ஊரி உங்களைத் தவிர வேறு பேச்சில்லை.''


''பரவால்ல ஒருமையிலேயே பேசலாம். இவன் அனுமதிக்க மேலும் அக்ஷய் உற்சாகமாய் விவரம் சொல்ல, தன்னைமீறி அதிதியும் அந்த இரு கவலர்களைத் தான் காட்டித் தர முடிவு செய்ததை அறிவித்து விட்டாள்!

உற்சாகம் தாளாமல் எழுந்து நின்றவன் அதிதியின் கைகளை பாய்ந்துப் பற்றினான்!

''தாங்க்ஸ் அதிதி எனக்குத் தெரியும் நீங்க... நீ நிச்சயம் உதவுவேன்னு.... அகல்யாவிற்கும்... அதாவது''

''தெரியும்- உங்க தங்கை''

''யெஸ்- உன்னை வந்து பார்க்க ரொம்ப ஆர்வம். ஆனா பச்சை



உடம்புன்னு அம்மா தடுத்துட்டாங்க.''

''பச்சன்னா இது... கலரில்லை ஆன்ட்டி. 'வீக்'கான உடம்பாம் அட்டிக்கக் கூடாதாம்- பாட்டி சொன்னாங்க''

பாதாம் தலியிலைப் பரிமாறிய அதிதி, குட்டிப் பெண்ணின் அருகிலேயே அமர்ந்து கொண்டாள். அவளது பள்ளி, தோழிகள், பிடித்த நிறம், உணவு, உடை எல்லாம் பற்றி பேச்சுக் கொடுக்க, அத்தனை பதில்களிலும் தன் தந்தையையும் சம்பந்தப்படுத்தியிருந்தாள் குழந்தை.

'எல்லோ பினின்னாலும் அப்பாதான் ஆன்ட்டி என்னை ஸ்கூலுக்குக் கூட்டிட்டுப் போவாங்க'.

'என் ப்ரெண்ட்ஸ் எல்லாருக்கும் எங்கப்பான்னா பிடிக்கும். எப்பவும் பாக்கெட்ல சாக்லெட்டா வச்சிருந்து தருவாங்கல்ல?'

'எனக்கு லாவண்டர் பிடிக்கும், ஆனா அப்பாவுக்கு புளூதான்' என்று

இந்தக் குழந்தையின் அப்பாவைக் காப்பாற்றியே தீர வேணுமென்று அதிதிக்குள் தவிப்புதான். ஆனால் அவசரப்பட்டு அதாவது பெரியப்பாவின் சம்மதம் கிடைக்காமல் அவள் தன் சம்மதத்தை அக்ஷயிடம் தெரிவித்திருக்கக் கூடாதெனவும் ஒரு நெருடல்.

ஆக ஜனனி கையில் ஒரு ஆல்பத்தைத் தந்து அவள் அதைப் புரட்டிய போது அது பற்றியும் அக்ஷயிடம் சொன்னாள்.

'பெரியப்பாதான் யோசிக்கறாங்க பயப்படறாங்கன்னு பரிது''.

''அவங்க இங்கே அதாவது இந்தியாவிலேயே இருக்க வேண்டாம்- அதாவில பருட்டம். ஆஸ்திரேலியா போவதாம் சொன்னாங்களோ?''

'ம்ம்- ஆனா காவல்ல பண்ணனும்னு...''

''வேண்டாம். அவங்க அந்த தாவிலே.... விசிட் டு எ பிரண்ட், இல்லையா? அது முடிந்து இங்க வரும் போது இங்கே எல்லாம் பிக்ஸ் ஆகியிருக்கும்.''

''அதாவது குற்றவாளிகள் ஜெயிலில்...? இப்பவே என்னை நாளை அன்றியும் மனமில்லாமல்- அனுமதி வாங்கி வீட்டில் தங்க வச்சிருந்தாங்க பெரியப்பா. தாவாண்டம் வார்டனிடம் தானும் தனி ரூம் வேணும்னு ஏற்கெனவே கேட்டிருந்தாள். அவங்களுக்கு சந்தோசம் ஏழலை. எனக்கும் ரூம்- மேட் நிலகாவிற்கும் ஏதோ ஒத்துப் போகலை என்பதோடு விஷயம் போச்சு''

கபாலி வீட்ல போலீஸ் கூட்டமா இருக்கே. அவனை கைது பண்ணப் போறாங்களா?

இல்ல... தீபாவளி மாமுல வீட்ல வந்து வாங்கச் சொல்லிட்டானாம். அதுதான் இந்த கூட்டம்.





''பாவம்... அந்தத் நிலகா தலைவிதிதான் பரிதாபமா?''

நிலகா மீது அதிதிக்கு பரிதாபமெல்லாம் சுரக்கவில்லை. சொத்து பண ஆசையினால் இங்கே கொலை முயற்சி என்றால், நிலகா படாடோபத்தின் மீதுள்ள பற்றினால் வேறு ஒரு பாவ வாழ்க்கைக்குள் புகுந்திருக்கிறாளே.

''அவ அதையெல்லாம் சமாளிப்பா. நம் பிரச்சனை பெரியப்பா வேலில் சம்மதிக்க மாட்டாங்களாதுதான். அதுவும் அவங்க இல்லாம நான் தனியே... எங்கே இருக்கறது..?''

''அதையெல்லாம் யோசிச்சாச்சு. பக்காவாய் திட்டம் தயார். இப்ப அங்கிள்டம் பேசமுடியுமா?''

தேவாரத்திடம் மிக இயல்பாய் பேச்சை ஆரம்பித்த அக்ஷய் விரைவாகவும் விவரத்திற்கு வந்து விட்டான்! பெரியவரின் முன்பு அமைதியாய் இருக்க நேர்ந்த சின்ன ஜனனிக்கு அங்கே ஐந்து நிமிடங்களுக்கு மேலே இருப்புக் கொள்ளாததில், அவளோடு தன் அறைக்குப் போய் விட்ட அதிதிக்கு அந்த இருவரின் பேச்சு பற்றித் தெரியாததால், அதன் விளைவு அவளுக்கு ஆச்சர்யம்... இல்லை அதிசயமேதான்!

'இன்னும் பத்து நாளில் உன் பரீட்சை முடியுதுடா அதி. கம்பெனியில் நீ சேர்ந்து செய்ய வேண்டிய ப்ராஜெக்ட்டிற்கு ரெண்டு, மூணு மாசமே போதும். ஆக நடுவே ஒரு மாசம் நீ சும்மாயிருந்தாலும் பாதகமில்லை. அந்நேரம் அடுக்கு, முக்கியமாய் இந்தக் குடும்பத்திற்கு ஒரு உபகாரம் செய்திட ஒரு சந்தர்ப்பம் வாய்ச்சிருக்குது.'

பெரியப்பா ஆரம்பிக்க, அக்ஷய் இடைபுகுந்தான். 'ஏற்கெனவே அதிதி செய்த உதவியே ரொம்பப் பெரியது சார்! தன் ஆபத்தைப் பொருட்படுத்தாமல் உங்க பொண்ணு செய்த உதவிக்கு நாங்க ரொம்பக் கடமைப்பட்டிருக்கோம். ஆக அவங்களுக்கு ஆபத்தேதும் நேராமப் பாதுகாக்க வேண்டியதும் எங்க கடமையாயிடுது. அதான் முதலில் இங்கே வரும் போது என் பிரண்ட்டின் காரில் வந்தோம். இப்போ வந்தது ஒரு டாக்ஸியில் ஜனனிக்கும் இங்கே வந்து போறது பற்றி யாரிடமும் சொல்லக்கூடாதுன்னு தெரியும்....''

''அந்தக் குழந்தைக்காகவும் பார்க்க வேண்டியிருக்குது''.

பச்சாதாபத்துடன் தலையாட்டினார் தேவாரம். அக்ஷய், குட்டி ஜனனியை இங்கு அழைத்து வந்தது இந்த நோக்கத்துடன்தான் என்பது தெளிவாக, அதிதி இன்னும் நம்ப முடியாமல் தன் பெரியப்பா மேலும் சொன்னத் தகவல்களைக் கேட்டுக் கொண்டிருந்தாள்!

பெரியவர் ஆஸ்ட்ரேலியா போகப் போறோர்- இருவாரங்களுக்குள்ளும். அந்நேரம் இங்கே அவர் வேலையில் ஏதும் தடுமாற்றம் நேர்ந்தால் கை தருவதாகவும் அக்ஷய் வாக்குத் தந்திருந்தான் போலும்.

ஆனால் - தான் இங்கே தனித்து இருக்கப்போவதில்லை. பெரியவருடன் வெளிநாடு போக தனக்கும் பயணச்சீட்டு வாங்கப்படும்.

இரு பெரிய பெட்டிகளுடன் தன் பெரியப்பாவுடன் விமான நிலையம் வரை போகும்-போதும் அதிதி, விமானத்திற்குள் நுழையப் போவதில்லை...

விமானமேறியதும் சொல்லப்பட்ட திட்டத்தை ஏதோ திரில் சினிமா பார்ப்பது போல சற்றே வாய் திறந்தே கேட்டிருந்த அதிதியின் நாக்கு இந்தக் கட்டத்தில் புரண்டது.

"அதாவது நான் உங்களோடு வெளிநாடு போறதாய் போக்குக் காட்டிட்டு இங்கயே இருக்கப் போறேனா, பெரியப்பா?"

"அது.. பாதுகாப்பில்லையேடா அதிதி. ரகசியமாய் அக்ஷயின் வீட்டில் கூடத் தங்கலாம். ஆனால் விஷயம் லேசாய் கசிஞ்சாலும் கூட, அந்தக் கொலைகாரப் பயல்களுக்குப் புரிஞ்சிடும்-நீ அவங்களைக் [illegible] இந்த [illegible] நீ வெளிநாட்டுக்குப் பறந்துட்டதாய் நினைக்கணும்-ஆனா நீ இங்கதான் இருக்கப்போறே"

"இங்கேன்னா...?"

"பொன்னாச்சியை ஒட்டி இருக்கறாங்க தோட்டத்துல!"

"அது பாதுகாப்பான இடமாத்தான் படுதும்மா-அங்கே தம்பிக்கு வீடு. அதைப் பராமரிக்க வேலையாட்களெல்லாம் இருக்காங்க."

"அது சரி பெரியப்பா-ஆனா அங்கேயிருந்தபடி நான் அந்த.. ரெண்டு கொலையாளிகளை எப்படி அடையாளங் காட்டறது?"

சற்று அலுப்பாகவே கேட்டாள்.

இந்த இரு ஆண்களும் சில மணிநேரம் கூடிப்பேசி, இப்படி ஒரு சொதப்பல் திட்டத்தை தன்னிடம் நீட்டுகிறார்களே என்று சற்று சலிப்புடனேயே அலுத்தாள்.

"நீ பாதுகாப்பாய் இருப்பது என் பொறுப்பு அதிதி. உன்னைக் கொண்டு அந்த இரண்டு கொலையாளிகளை அடையாளம் கண்டுபிடிப்பது போலீஸின் கடமை. நாம பொன்னாச்சிக்குக் காரில் போகும் போதே கூட அவங்களது [illegible], ஆல்பமை உன்னிடம் காட்டிடச் சொல்லலாம். உன் நினைவிலிருக்கும் சாயலில் அதில் யாரேனும் தட்டுப்பட்டால் காட்டு."

"ம்ம்... ஆனா.. சாயலை விட, எனக்குக் குரலைத்தான் அடையாளம் காட்ட முடியும்னு படுது..."

"ஓ...? அதற்கு ஏதும் வழியிருக்குதான்னு பார்ப்போம்."

யோசனையுடன் சொன்னவன் கண்களில் நம்பிக்கைக் கீற்று விட...

அதை ஆர்வமாய் பார்த்திருந்தாள் அதிதி.

## 8

பார்வைக்குப் புலப்படாத, பலத்த, ஆனால் சாதாரணமாய் பார்க்கும் பலரின் பாதுகாப்புடன் தன் பரீட்சைகளை எழுதி முடித்தாள் அதிதி. [illegible] சில வாரங்களுக்கு முன் அவளுக்கு நேர்ந்த



அதிர்ச்சியான அனுபவம் மேலும் பல வித்தியாசமான அனுபவங்களுக்கு வழி விட்டிருந்தது.

அதில் முக்கியமானது அக்ஷய், அவனது குடும்பத்தாருடனான பழக்கம் [illegible] அதிதிக்குப் புரிந்தது. [illegible] அவளோடு [illegible] நடமாடினான்.

[illegible]

இதே போல அக்ஷய் சொல்லியதும் கூட ஞாபகத்திலுண்டு. 'நம் கெட்டிக்காரத்தனம் நமது அனுபவத்திலிருந்து விளைகிறது. நமது அனுபவமோ நம் முட்டாள் தனத்திலிருந்து' என்று சொல்லிவிட்டு சிரித்தானே-அந்த சிரித்த முகம் கண்ணிற்குள்ளேயே நிற்கிறது!

[illegible]

குடும்பத்தாரிடம் அவன் காட்டிய கரிசனத்தை இவளது பாதுகாப்பிலும் அவன் பேச்சு சாதுர்யம் அவளை அச்சமான சூழலிலும் கூட சிரிக்கச் செய்திருந்தது.

[illegible]

ஆனால் இத்தனை உணர்வுகளையும் மூட்டைகட்டி வைத்துவிட்டு, அதிதி முடிந்த வரை படித்து ஒழுங்காகவே பரீட்சையை முடித்தாள். கூடவே பயணத்திற்கான ஏற்பாடுகளையும் செய்திருந்தவளுக்கு, பெரியப்பா ஆஸ்திரேலியா கிளம்பிய தினம், ஏதோ 'திரில்லர்' திரைப்படம் ஒன்றைப் பார்க்கும் அனுபவமாயிற்று!

"'செக் இன்' செய்யும் பயணிகள் வெளியே வர முடியாதே?"

'என்பெட்டிகள் எப்படி உங்களுக்குப் போகும்?'

'இவ்வளவு நாடகமாடணுமா, அந்தளவிற்கு அந்த கொலைக்கு

வேண்டியிருக்கிறது...

எடுத்து வந்திருந்த சிற்றுண்டிகளைக் காரில் அமர்ந்தபடியே உண்டார்கள். இருட்டும் முன்னே தோப்பை நெருங்கி விட்டார்கள்.

"நீ தூங்குவேன்னு நினச்சேன் அதிதி. படிச்சு, பரீட்சை எழுதின களைப்பில்..."

"அதெல்லாமில்லை."

"பரீட்சைக்குப் படிக்கலைங்கறியா?"

"பாடங்கள் எளிதாய் புரிஞ்சிடுச்சு. இப்ப நான் இங்கேத் தனியா வந்திருப்பது தான் என்னு புரியலை."

"உன் பாதுகாப்பிற்கு நீ வெளிநாடு போயிட்டதாக நினைச்சு கொலையாளிகள் சிலர்கள் ஆனாங்க. அப்படி நடமாடுறவங்களை மடக்குறது சுலபம்."

"நான் இங்கேயிருக்கேனே?"

"பிரமாதமாய் அடையாளம் சொன்னே.. பேசிக் காட்டினே போதாது?" "இதைச் சொல்லிட்டு, நான் பெரியப்பாவுடனேயே போயிருக்கலாமோ?"

"ஏன் அதிதி? என்னோடு இந்தத் தனியான இடத்துல தங்கறது உனக்கு சங்கடமாயிருக்குதா?"

ஓட்டுனருக்குப் புரியக் கூடாதென்பது போல குரலைத் தணித்து ஆங்கிலத்தில் கேட்டான்.

"உங்களுக்கு.. அவ்வாறு இது போலொரு நிலைமையிலிருந்தால்?"

"தர்மசங்கடம்தான்! ஆனால் அவளைப் பெண் கேட்டு மாப்பிள்ளை வீட்டிலிருந்து வரவும், அவசரங்காமல் பிரபாகர் பின்னோடேயே போயிட்டானே!"

அப்பாவியாய் அவன் சொல்ல, இவளுக்கு லேசாய் எரிச்சல் கண்டது. திருமணமாகி புகுந்த வீட்டிற்குப் போவதை, தன் அனுபவத்துடன் அவன் எப்படி ஒப்பிடலாம் என்ற சிறுசிடுப்பு!

ஆனால் அவர்களது தோப்பினுள் நுழைந்ததும் ஏற்பட்ட மலைப்பில் அந்தத் தற்காலிக எரிச்சல் காணாமற்போனது. அந்த மாலையின் நிறங்களும் குளுமையும், தென்னையும் மற்ற பழ மரங்களுமாய் அடர்ந்திருந்த அந்தத் தோட்டத்தை மேலும் வசீகரப்படுத்தியிருந்தன.

இருபது வருசமா தீபாவளிக்கு நான்பட்டுச்சேலைதான் எடுக்குறேன்.
எப்படி உன்னால் முடியுது?
"கூட்டமாக இருக்கிற கடையைப்பார்த்துத் தான்".
- முருகேசன், தேனி.





பாத்த கால்களை நீவியபடியே இறங்கியவன் சுற்றிலும் விழிகளோட்டினான்.

"ரொம்ப அழகாயிருக்கு அங்கிள்" என்றாள் மெல்ல.

காரின் சத்தத்தில் ஓடி வந்திருந்த இரு வேலையாட்கள் கூற.

"குளிக்க வெந்நீர், சாப்பாடு எல்லாம் ரெடிதானே?" என்றான் அக்கறையாய்.

"பின்ன? பெரியம்மா அங்கேருந்து சகலமும் உத்தரவிட்டுட்டாங்களே!" ஓரப்பார்வையால் புதியவளைப் பார்த்தபடி குழைந்தான் வேலையாள்.

"அம்மாவுக்கும் வாறதுக்கு ஆசைதான் அதிதி. அதுதான் முறையும் கூட. ஆனா அக்காவை அந்நிலையில் விட்டுட்டு.. தவிர ஜுனன் வேறு வீட்டுல."

"பெரியப்பா இப்படின்னு தெரிஞ்சிருந்தால் அனுமதிச்சிருக்க மாட்டாங்க."

"வீட்டுக்குள்ளே நீ இன்னும் பார்க்கலையே அதிதி. நல்ல வசதி!"

"வேலைக்குக் கூட இங்கேப் பெண்கள் இருக்கறது போலத் தெரியலியே."

துளி முறைப்பாய், மிடுக்காய் மிரட்டினாள்.

"ஆளண்டா இடமில்லையா? பெண்கள் வந்து தங்க யோசிக்கிறாங்க."

"பேதைகள் தான் வந்து மாட்டிக்கிறாங்க!"

"நீ பயப்பட எதுமில்லை அதிதி. அப்படி உனக்குச் சங்கடமாயிருந்தால் என் அம்மாவை நீயே இங்கே வரச் சொல்லிடு-விம்பின்."

வீடு சென்றதால், சௌகர்யமாயிருந்தது. உரியவர்கள் தங்காத வீடு என்பது தெரியாத அளவிற்குச் சுத்தமாய் பராமரிக்கப்பட்டிருந்தது.

"நீங்க உங்க வேலை.. பிள்ளையை விட்டுட்டு இங்க எப்படி இருப்பீங்க?"

"நீ ஜீவா அண்ணனுக்காய் இங்கேத் தனியாய் வந்திருக்க, நான் உனக்குத் துணையாய் இருக்கறது தானே நியாயம். முதல்ல அப்பாவைத்தான் இங்கே உன்னோடிருக்க அனுப்ப நினைச்சோம் அதி. அவருக்கு சர்க்கரை நோய், பி.பி. எல்லாமுண்டு. எல்லாம் ஜீவா கல்யாணத்திற்குப் பிறகுதான்."

"அப்படி சுலபமாய் நீங்க பழியை உங்க அண்ணி மேல் சுமத்திட முடியாது."

"ஸ்ட்ரெஸ்-இண்ட்யூஸ்ட் வியாதி இதுன்னார் டாக்டர். மனஉளைச்சல் உடம்பை பாதிப்பதை விஞ்ஞானமே ருசுப்படுத்தியிருக்கே. ஆக அப்பாவும் அம்மாவின் கவனிப்பில். தவிர உன் பெரியப்பாவே தான் உன்னோடு வந்திருந்து பார்த்துக் கொண்டால் தனக்குத் திருப்தி என்ற பிறகு நான் பிகு பண்ண முடியாதில்லையா?"

உண்மையாகவே தன் பெரியப்பா அப்படி சொல்லியிருக்கக் கூடுமா அல்லது இது அக்ஷயின் இண்டல் பேச்சா.. குழப்பத்துடனேயே குளிக்கப்போனாள் அதிதி!

## 9

''விதவிதமாய் சமைச்சிருக்கேனுங்க.

[illegible]



[illegible]

'நெல், ஜீனியைக் கொட்டிக் கொஞ்சமா விளக்குமாற்றைக் கூட பரிமாறிவிடலாம்' என்று தன் பெரியம்மா சொன்னது நினைவிற்கு வர, எழுந்த சிரிப்பை அடக்கியபடி,

''அது நாக்குக்கு ருசிதான்... ஆனா வயிற்றுக்கு நல்லதில்லையே'' என்றான். ''அதாவது நீங்க இப்படி சிறகாட்டம் மெல்லிசா இருக்க முடியாது. அப்படித்தானுங்களே'' சிரித்து சிரித்தான் நவாப்.

''அம்மணி வர்றதாய் பெரியவங்க சொன்னதும் எங்களுக்கு ரொம்ப சந்தோஷமுங்க. கருத்தாய் வீட்டை சுத்தப்படுத்தினோமுங்க.''

''தாங்க்ஸ். எல்லாம் வசதியாயிருக்குது.''

''டி.வி. கிட அம்மணிக்காக டாடா ஸ்கையெல்லாம் ஏற்பாடு செஞ்சாங்க.''

''ஓ... ஆனா நான் வாசிக்கிறதுதான் அதிகம்.''

''அதுவும் பெரியம்மா சொன்னாங்களே... நீங்க சொல்ற பத்திரிக்கையை டவுனுக்குப் போய் வாங்கி வந்திருவேனுங்க.''

''வேணுங்கற புத்தகங்களைக் கொண்டு வந்திருக்கேன்.''

''நல்லதுங்க. ரூமில் உங்க மூணு பெட்டியையும் வச்சாச்சு. அத்தனையையும் பிரிச்சு அடுக்கவே சோர்ந்துடுவீங்களே. உங்க கை ஒத்தாசைக்கு ஒரு பொண்ணை வேலைக்குச் சேர்க்கலாம்ணா, பெரிய ஐயா புதுசா யாரும் இப்ப வீட்டுல வேண்டாம்னுட்டாங்க.''

அதிதி சற்று குழப்பமாய் யோசித்தாள். தான் கொண்டு வந்த பெட்டிகள் இரண்டுதானே... என்று.

''பெட்டியைத் தூக்க, நகர்த்த என்னைக் கூப்பிடுங்கம்மணி. எடுபிடி பையனுங்க உண்டு... ஆனா அவனுங்களுக்கு அத்தனை கூறு போதாதுங்க... அதான்.''

''தாங்க்ஸ்.'' 'ங்க' என்று தன் வார்த்தைகளுக்கு ஒரு வால் ஒட்ட வைக்க எழுந்த ஆசையை கருட்டினாள். அது கிண்டலடிப்பது போலத் தோன்றுமோ என்ற தயக்கம்!

''காலைல அம்மணிக்குக் குடிக்க..?''

''காபி நானே வந்து கலந்துக்கறேன்.'' என்றபடி தன் அறையை நோக்கி நடந்தவளின் ஓரக்கண், தாழ்வாரத்தில் அக்ஷய் இன்னும் போனில் பேசியபடி நடந்ததைத் தவற விடவில்லை!

அறைக்குள் இருந்த மூன்றாவது பெட்டியைப் பார்த்தவள், குரல் தந்தாள்.

'நவாப்பண்ணா.'

அழைப்பிற்காய் காத்திருந்த நிலையில் மறுகணமே வந்து நின்றவனை அவளது 'அண்ணா' பரவசப்படுத்தியது போலும்.

''என்னங்க அம்மணி?'' -அகண்ட சிரிப்புடன் கேட்டான். 'இது என் பெட்டியில்லையே...''

''ஆனா சின்னவர் தெளிவாச் சொன்னாருங்களே. இது உங்க ரூமுக்குத்தானுன்னு. பெட்டியை படுக்கையில வைக்கட்டுங்களா... திறந்து பார்க்கத் தோதாய்...?''

''ஆமாம் நவாப்'' - அறைக்கு வெளியேயிருந்து அக்ஷயின் குரல் உத்தரவிட்டது.



நவாப் சொன்னதைச் செய்து விட்டு வெளியேற, உத்தரவு தொடர்ந்தது.

''திறந்து பார் அதிதி. அதில் உனக்காய் நான் வாங்கியவை பாரேன்.''

பெருகிய ஆர்வத்தைக் காட்டிக் கொள்ளாமல் பெட்டியைத் திறந்தவள் புருவங்கள் முடிச்சிட்டன.

இரண்டு நிறத்தில், சற்று மட்டமான துணியில் அதுவும் ஜோபத்துப் புடவைகளேனும்... இந்தத் தரத்திலான உடைகளை இவள் இதுவரை உடுத்தியதே இல்லையே...

அறை வாசலில் நின்றவளை எதிட்டவனின் முகத்தில் குழப்பத்தோடே சிறு கோபமும் இருந்தது!

## 10

ஆனிந்து. கொட்டை பாக்கு நிற 'மொறமொறப்பான' தைலக்ஸ் புடவையைச் சுற்றிய நிமிர, கண்ணாடியில் தெரிந்த அவளது பிம்பம் நிச்சயம் வித்தியாசமாய்த்தான் இருந்தது!

சற்று தொளதொளப்பான முழங்கை வரை நீண்ட ரவிக்கை, இம்சையாய் தோன்ற, தலைமுடியை மேல்நோக்கி படிய வாரி இறுகப் பின்னலிட்டாள்.

கண்களுக்கு மையிட துறுதுறுத்த விரல்களை அடக்கினாள்.

அக்ஷய் சொன்னது சரி.

'ஆள் பாதி ஆடை பாதி' என்பதும் உண்மையே.

அவளுக்குத் தன்னை அடையாளம் காண சில நொடிகளாகிறதே! செயற்கையாக் கருதி, குட்டைக் கை ஸ்லீவ்லெஸ்களைத்தான் அவள் அணிவது. அதில் அவளது இளமூங்கில் கரங்கள் அழகாய் தெரியும். இந்த ரவிக்கையில், அக்கரங்களின் மழமழப்பும், இடுப்பின் வெண்மை வளைவும் மறைந்து போயின.

சேலையின் அசட்டு நிறம் அணிந்தவளின் நிறத்திற்குக் கட்டியம் கூறாமல் 'கம்' மென்றிருந்தாற் போலிருக்க, தனக்குள்ளாய் சிரித்துக் கொண்டாள்.

'வேறென்ன கண்டிஷன்?' என்று நேற்று இவள் கேட்க, அவனும் சளைக்காமல்,

'நீ அதிகம் பேசாமலிருக்கணும் அதிதி. நவாபிற்கு பேச்சுத்துணைக்கு நீ கிடைச்சது கொண்டாட்டமாயிருக்கலாம். ஆனால் பேச்சில் வெளியாகும் விவரங்கள் நம் திண்டாட்டமாகிடக் கூடாது! அதாவது எங்கம்மா உன்னைப் பற்றி ஏதேனும் சில விவரங்களைத் தந்திருக்கலாம். நீ தன்னுடைய உறவுப் பெண் படிக்க அமைதியான இடந் தேடி இங்கே வந்திருப்பதாய்... இப்படி. அதற்கு நீ சொல்லும் தகவல்கள் முரண்படக் கூடாதே?''

'ம்ம். ஆக கவனத்தை ஈர்க்கும் வகையில் நான் உடுத்தக் கூடாது. வாயும் திறக்காமல் இந்த அறையில் மூலையில் படிச்சபடி இருக்கணும்.



இருதாள்.

அரிந்த வெங்காயம் கலந்த மெத்தென்ற ஊத்தப்பத்தை மல்லிச் சட்னியுடன் ரசித்து உண்டா அக்ஷய்.

''சுகவனம்னு சொல்வாங்களே. அது உனக்குப் பூரணமாய் வாய்த்திருக்குது அதிதி''- பாராட்டினான்.

ஆனால் காலை தன்னைப் புது கோலத்தில் அவன் பார்த்ததும் இடைத்த பாராட்டு அவளுக்கு இதைவிடப் பிடித்திருந்தது.

இவளைப் பிரமிப்பாய்ச் சில கணங்கள் பார்த்துவிட்டு,

''வாவ்.. நான் ஒரு முட்டாள் அதிதி''- என்றான். ''ஒத்துக்கிட்டால் சரி. நிசமென்று எப்படி இருந்த ஞானம்?''

''சாதாரண உடையில் நீ சாதாரணமாய் தெரிவேன்னு நினைச்சேன். அது முட்டாள்த்தனமில்லையா? நீ எப்படி, எது உடுத்தாலும் பொருந்துறதன்.''

அவன் தலையசைப்பு அவன் பேச்சு மிகையில்லை என்றது.

''தாங்க்ஸ்.''

''இப்படி சாதா டிரஸ் வாங்கித் தந்த என்மேல் தேற்று உனக்குக் கொஞ்சம் ஆத்திரமாதான் இல்லியா?''

''ம்ம்.. ஆனா பரவால்ல. என்னைப் பலர் அழகுன்னு சொன்னதுண்டு. ஆனா யாரும் 'பொருந்'ன்னு இப்படி சிக்ஸர் அடிச்சதில்லை. அதனால் பரவாயில்லைன்னு அதை விட்டுடலாம்!''

''டைட் மற்றவங்களுக்கு பொறாமை.. அல்லது காவிக்கிப்போயிரா பாதிப்பு இருந்திருக்கலாம் அதிதி.'' என்றான் சிரிப்பாய்.

''அதென்னது?''

அவனைக் கவர்க்கும் எண்ணத்தை விட்டு ஆச்சரியமாய் கேட்டான்.

''போயியான்னா பயம்.''

''தெரியும்- அதென்ன காவிக்கி?''

''அழகிய பெண்ணுன்னு பொருள் ஆக மற்றவங்க உன் அழகில் மிரண்டிருப்பாங்க.. லோ.''

''போதும்.. அக்ஷய்- டேமர்.'' கைகளை ஆட்டியபடி சிரித்தாள்.

''நீ நல்ல மூடில் இருக்கும் போதே இன்னுமொரு வேண்டுகோள் அதிதி..''

டாக்டர் கொடுத்த மருந்து சீட்டை தெரியாம

பட்டீக் கடையில் கொடுத்து விட்டேன்.

அப்புறம்..!

வெட்டினாய் மூட்டை மூட்டை யாக்கட்டி வீட்டுக்கு அனுப்பிட் டாங்க..!

- எம்.மாரியப்பன், தேனி.





''இரண்டாட.''

என்றவளிடம் ஒரு சிறு டப்பாவை நீட்டினான்.

திறக்கும் முன்பே அது என்ன என்பது புரிய, எத்தனை நுணுக்கமாய் யோசித்து, செயல்பட்டிருக்கிறான் என்று வியப்பாயிருந்தது. தவிர முதலில் சற்று முகம் கோணிய தன்னை மிக இதமாய் சம்மதிக்கவும் பண்ணியவன் இல்லையா?

கவனமாய் டப்பாவிலிருந்த மூக்குக் கண்ணாடியை எடுத்து போட்டுக் கொண்டு, புது மிடுக்குடன் அவனைப் பார்த்தாள்.

''வணக்கங்க மேடம்.. வந்து நீங்க வெளியே 'வாக்' போகையில் இதைப் போட்டுகிட்டால் அடிவேறுக்கு வேறும் தெம்பாயிருக்கும். இது பவர் இல்லாத சாதா லென்ஸ். உங்க அழகிய கண்களுக்கு ஒரு திரையிடு கவசமாயிருக்கும். தவிர இப்படி மிடுக்காய் நடந்தால், பாதையின் பாம்பு, பூரானெல்லாம் கூட உங்களுக்கு வியந்து வழிவிடும்னு தோணுது!

''ஓ...'' மிடுக்காய் நோக்கிய அதிதியின் விழிகள் கலக்கமாய் விரிந்தன. ''இங்கே பூச்சி நடமாட்டம் உண்டா??''

''பூ..ச்சியில்லை. பூ..ரா..ன். துறு குட்டி காவாசை அவசரமாய் வளைஞ்சு நெளிஞ்சு ஓடுமே..''

கண்களை மூடிக் கொண்டாள். ''ப்ளீஸ்.. சரியாச் சொல்லுங்க.''

''காலை வெயிலில்- அவை தலை நீட்டாது. இருட்டினபிறகு நீதான் மூலையில் உட்கார்ந்து வாசிக்கப் போறியே. அதுவும் அதுக்கால் நாம இப்படி வாயாடலாம்!''

உல்லாசமாய் சிரித்தவனை சற்று நன்றியுடனேயே பார்த்தாள்.

அவனுக்கும் இங்கே அடைத்து கிடப்பது ஒன்றும் உவப்பானதல்ல. வேலை, குடும்பத்தை விட்டுவிட்டு ஒரு இளம் பெண்ணிற்குத் துணையாயிருப்பது ஒரு இக்கட்டான சூழலும் கூட!

அதை அவன் மிக லாவகமாய், திறமையாய் கையாளுவதாய் பட, அக்டிாவிற்கு எந்த நெருக்கடியும் தராத அளவில் தான் நடந்து கொள்ள வேண்டுமென்றுதான் அதிதி முடிவு செய்தாள்..

ஆனால் அதை நடைமுறைப்படுத்துவது அத்தனை சுலபமாயில்லை!

## 11

நாலைந்து நாட்களில் தன் நாளை இதுவாய் படுத்து இருந்தாள் அதிதி.

காலை பத்திற்குள் குளித்துத் தயாராகி, சமையலில் உதவுவது. பிறகு இரண்டு மணி நேர வாசிப்பு.

இன்டர்நெட் மூலம் பெரியப்பாவுடன் பேச்சு, தன் ப்ராஜெக்டிற்கான விஷயத் தேடல்கள்.

மதியம் டி.வி.யில் புதைய படங்களைப் பார்ப்பது புதுப் பழக்கமாயிருந்தது. மாலை ஒரு மணி நேரத்திற்கு விறுவிறுப்பான நடை..

பிறகு இரவு சமையலில் உதவி, டி.வி. செய்திகள், வாசிப்பு, உறக்கம் என்று.

தெய் சாதத்தில் தாளப்பட்ட வறுத்த முந்திரி போல, இடையே அக்ஷயோடு நேரும் சுவாரஸ்யப் பேச்சுகள்!

இரவு உணவிற்கு பின் அவர்களது செஸ்-ஆட்டத்தை அவள் மிக ஆவலாகவே எதிர்பார்த்தாள். அவன் அதில் தேர்ச்சியுடையவனாய் இருக்க, இவளும் தன் மூளையைக் கசக்கியே காய்களை நகர்த்த வேண்டியிருந்தது. அந்த சவாலோடு இடையே நேர்ந்த கேலிப் பேச்சும், சீண்டலும் போலி மிரட்டல்களும் இவளுக்கான புத்துணர்வு தந்தன.

அன்று காலை பூக்களை கிழங்கு மசாலைத் தயாரித்து வைத்தவள், பின்புற தோட்டத்திற்குப் போனாள். காய்கறி, கீரைப் பாத்திகளுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்த இளைஞன் புன்னகையுடன் நிமிர்ந்தான். தன்னிச்சையாய் வளர்ந்து, பூத்திருந்த செவ்வந்தி செடியிலிருந்து ஒரு அகண்ட பூவைப் பறித்துத் தலையில் சூடிக் கொண்டவள் அவனிடம் பேச்சுத் துவங்கினாள்.

''உங்க சாம்பல் நிற புடவைக்குப் பூ எடுப்பா இருக்குதுங்க'' என்றான்.

''தாங்க்ஸ். இங்கே ஒரு பிச்சி செடியை நனி வச்சால், வாசமான பூ கிடைக்குமே.. முரளிதானே உம் பேர்?''

''ஆமாமுங்க.. பூச்செடி அவசியமில்லீங்களே. பூத்து.. அது மண்ணுக்கு உரமாத்தானே விழும்? பறிக்க யாரு தொடுக்கறது?''

''இங்கே யாருக்கும் கல்யாணம் ஆகலியா?''

இளைஞன் உடம்பு கோணினான்- ''எனக்கெல்லாம் அதுக்கான வயசில்லீங்க..''

''தவாப்?''

''அவருக்கு யாருமே பொண்ணு தாலீங்க.'' சிரிப்பை அடக்கிக் கொண்டான். ''அப்படி ஒரு அம்மணி வந்தா நாங்களும் தாக்குக்கு எந்து போல சாப்பிடலாம்..''

''எனக்கு தெரிஞ்சவரில் கொஞ்சமாய் சமைக்கிறேன்.. நிறைய பேருக்கெல்லாம் நான் சமைத்தாள்..''

''ஐயோ.. உங்களை அப்படி சமைக்க விடவோமுங்களா? படிக்கறதுக்காய் வந்தவங்க காரண்டு பிடிக்கக் கூடாதுங்க... தடிமனான புஸ்தகமாய் வாசிப்பீங்கன்னு தவாப் சொல்வாருங்க...''

''நீ வாசிக்கறதுண்டா முரளி?''

''இங்கேயே பிறந்து வளர்ந்தோமா.. ஸ்கூலுக்குப் போக வாய்க்கலீங்க.''

''எழுதப் படிக்கத் தெரிஞ்சுக்கணும் முரளி. பேப்பர் வாசிச்சு நாலு விஷயம் அறிஞ்சுக்கலாமில்லை?''

''இனி எங்கேங்க படிக்கற வயசு போச்சல்ல?''

அதற்றவனுக்கு பதினேழு வயதிருக்கும். முகத்தில் பூனை முடி அரும்பும் பருவம். உழைப்பால் திரண்ட உடம்பில் அவன் பாமர முகமும் ஆழ்வமான விழிகளும் இவளை இளக்கின.

''படிப்பிற்கு வயசெல்லாம் தேவையில்லை முரளி. நாளைக்கு உன் தங்கையின் பழைய புத்தகத்தை எடுத்துட்டு வா-



எழுத்துக்களை, பிறகு அதைக் கூட்டி வாசிக்கக் கற்றுத் தரேன். நீ புத்திசாலி, சீக்கிரமாய் தேறிடுவே..''

மலர்ந்த முகத்துடன் வந்த முரளியின் நன்றியை, அந்தக் குரல் வந்து வெட்டிப் பிரித்தது.

''அதிதி- என்ன பேச்சு? வந்து சாப்பிடு''

அந்தத் தொனி அவளை உறுத்தியது. இத்தனைக் கடுமையான பாவனையில் பேசுவதற்கு இப்போது என்ன நேர்ந்தது?

''சரி முரளி- நாளைக்குப் புத்தகத்தோடு வா.''

என்றவள் வீடு நோக்கி நடக்க அங்கே கடுகடுத்த முகத்துடன் காத்திருந்தான் அக்ஷய்.

''அதிகம் பேச வேண்டாம்னேன், அதிதி.''

''இங்கே வேலைப் பார்க்கிற பையன்.''

''அது இன்னும் ஆபத்து. வேலை பார்ப்பவங்க இடைவெளிப்பதான் முதல்ல தகவலைத் துரவுவாங்க.''

''அப்போ... தவாபுடனும் பேசக்கூடாது?''

''எல்லாவற்றுக்கும் கம்மியாய் பேசுகிறாயோ அத்தனைக்கு நல்லது.''

பதில் 'சுள்' ளென்று வந்தது.

''நான் சாப்பிட்டாச்சு - நீ போய் சாப்பிடு'' - உத்தரவிட்டவன், அழைத்த செல்போனை அழுத்தி ''சொல்லு லீலா'' என்றபடி பேசப் போய்விட அதிதி சற்று குன்றலாகவே சாப்பிட அமர்ந்தாள்.

பெயருக்குத்தான் உண்ண முடிந்தது.

பிறகு தொடர்ந்த வாசிப்பிலும் பெரிதாய் கவனம் பதியவில்லை. பெருமூச்சுடன் நிமிர்ந்தவளுக்கு நிலைக் கண்ணாடியில், கறுப்பு பிரேமிட்ட சதுர மூக்குக் கண்ணாடி, சாம்பல் நிறப் புடவையுடன் சோர்வாய் தெரிந்த தன் பிம்பம் சுவக்கியது- எரிச்சலூட்டியது!

இது தேவையா?

ஒருவரைக் காப்பாற்ற போக... அது தொடர்கதையாகி இப்படி ஒரு இக்கட்டினுள் சிக்கிக் கிடப்பது அவசியமா?

ஏனிந்த மாய வட்டத்தினுள் அடைபட்டேன்?

தன் பெரியப்பா தன்னை இங்கு அனுப்ப சம்மதித்ததில் அதிதிக்கு இன்றுமே ஆச்சரியந்தான்!

அப்படியிருக்க அக்ஷய் ஏன் தன்னிடம் இத்தனை சிடுசிடுத்தான்? விருந்தும் மருந்தும் மூன்று நாளாமே... இவன் இங்கு வந்து ஆறு நாட்களாகிறதே- அந்த சலிப்பா?

மேலும் நான்கு சுவர்களுக்கிடையேபக்கங்களைப் புரட்ட இயலாது போக, எழுந்து சமையலறைக்குப் போனாள்- ஒரு காபி தன்னை உற்சாகப்படுத்துமோ என்று.

அங்கே தவாப், சுருதி சேராத ஒரு ஆலாபனையுடன் தாளித்துக் கொண்டிருந்த மசாலாவின் நெடியில், பலக்கத் தும்மினாள்.

''அம்மணி படிக்க உட்கார்ந்துட்டாங்க - அதான் நானே புறா சாப்பாடும் கோழி பிரியாணியும்னு மெனு போட்டுட்டேனுங்க.''

12

"ஹைய்யோ... அ...அது அதிதி..."

தன்னை உலுக்கியவனைத் திரும்பிப் பார்த்த விஷ்ணு.

"என்ன பேபி? தண்ணி ஜாஸ்தியாயிருச்சா-ஏதோ உளர்றே?" என்றடவுத்தான்.

"அதோ அந்த மரத்தின் கீழே சாம்பல் கலர் புடவையில் ஒரு பொண்ணு நிக்கிறா - தெரியுதா?"

"சூப்பர் பிகர் - அவ வந்ததுமே கவனிச்சுட்டேன். அந்த முரட்டுக் கண்ணாடியைக் கழட்டிட்டு, ஒரு லிப்ஸ்டிக் தீட்டினால் அம்சமாயிருப்பாளேன்னு கூட நினைச்சேன். நீ கோபப்படுவியோன்னு கண்டுக்காமலிருந்தேன். உன் பர்மிஷன் கிடைச்சாச்சே - பிறகென்ன?"

விரல்களால் தன் விழிகளை விரித்து விட்டபடி தொலைவில் நின்ற அப்பெண்ணைப் பார்த்தான் விஷ்ணு.

"ஸ்ட்ரேன்ஜ் விஷ்ணு"

"ஏது விசித்திரமாயிருக்கு?"

"இல... இந்த அதிதி அப்படித்தான் இருப்பா. எங்க காலேஜில் இவளை 'அழகி'ன்னுதான் கூப்பிடுவாங்க. பிரமாதமான அவுட் பிட்'லில் மாடலாட்டம் திரிவா..."

"அப்ப எளிய காட்டில் இத்தனை அவுட் ஆப் போகஸ் மாடலில் நிக்கிறா?"

"அதான் யோசிக்கறேன்."

"உடலுழைப்பு இல்லாதவங்க வேசாய் குனிஞ்சு நிமிர்ந்தாலே மூச்சிரைக்கும்" - அவன் சொன்னது புரியாமல் குழப்பமாய் பார்த்தான் -

"நீ என் அதாவசியமாய் யோசிக்கணுங்கறேன் - அதெல்லாம் மூளை உள்ளவங்களுக்கு!"

"நான் எம்.பி.ஏ.ஸ்டூடண்ட்."

"பிராஜெக்ட்டுக்கு எங்க கம்பெனி ஏறி, இப்ப எனக்குக் கம்பெனி தந்திட்டிருக்கே - ஞாபகமிருக்கா...?"

"நீ கூப்பிட்டதால வந்தேன்."

"எல்லாப் பொண்ணுங்களையும் கூப்பிட முடியுமா?" திருப்பியடித்தான்.

'கூப்பிட்டாலும் கூட வருவாங்களா?' என்று நக்கலடித்தது அவன் பார்வை.

"இந்த ஆம்பிளைகளே மோசம் - காரியமானதும் இப்படி கழுத்து கிண்டலடிக்கிறது" - சற்று கோபமாய் எழுந்தவன் அதிதி இப்பக்கமாய் திரும்ப, அவசரமாய் முதுகு திருப்பி நின்றான். தெற்றிவை நீவியபடி யோசித்தான் - நிச்சயமாய் அங்கே நிற்பது அதிதியேதான் - சந்தேகமில்லை.

அவளருகே வேட்டி சட்டையில் ஒரு பாமரன் வேறு.

விதவிதமான கார்களில் வரும் அதிதி இங்கே எப்படி... அதிலும் இந்த உடையமைப்பும்... அது ஏன்?

நகம் கடித்தவனின் கண்கள் பிரகாசமாயின.



தன் செல்போனை எடுத்தவன் அதில் பதிவாகியிருந்த எண்களை அவசரமாய் தேடினான்.

தேடியது தட்டுப்பட, அந்த எண்களைத் தட்டியவன், போனை காதிற்கு உயர்த்தினான்.

"ஹலோ... நான் நிலகா பேசுறேன்."

"பத்து நாளைக்கு முன்னே கடைசி பரீட்சை சமயம் என்னைக் காலேஜில் வந்து பார்த்து பேசினீங்களே?"

"அப்போ சொல்ல விவரமில்லைன்னேன்... ஆனா இப்ப துப்பு தர எங்கிட்ட விஷயமிருக்குது."

"ஆமா அதே அதிதி விஷயமாத்தான். நோஅவ வெளிநாடெல்லாம் போகல, எங்கிட்ட அப்படி சொன்னவ, தன் பெரியப்பாவுடன் ஆஸ்திரேலியா போகலை."

"அ...ஆ! இந்தியாவுல எங்கே இருக்காள்றதை நான் சொல்ல முடியாது. அதாவது 'ரேட்' பேசாமல் நான் மேற்கொண்டு தகவல் தர்றதாயில்லை."

"பத்து இருபதாயிரமா? போக்கு காட்டிட்டு வாறு வேஷத்துல அவ இங்கே இருக்கான்னா அவளிடம் மறைக்க ஏதோ மர்மமிருக்குதுன்னு புரியுதே. நீங்களும் பதட்டமாய் வந்து என் ரூம் - மேட்டை பத்தி என்னிடம் வந்து விசாரிக்கலை? ஆக இது பெரிய விஷயம் - லட்சக்கணக்கில் பேசலாமே - என்ன?"

"மிரட்டலை. இப்ப அவ....அதிதி என் எதிரே நிக்குறா- ஆனாவேற கெட்டப்புல. மேலும் விவரங்களுக்கு ஐஞ்சு லட்சம் தேவை- வச்சிரவா? பை..."

"எப்போதிருந்து உன் ரேட் இப்படி எகிறிச்சு, நிலகா?"

நக்கலில் கேட்டான் விஷ்ணு.

பெரும் புள்ளி சிக்கும் போலிருக்க, இப்போது விஷ்ணு சிறுபுள்ளியாய் அவளுக்குத் தோன்றினான்!

அவன் பேசும் பேச்சிற்கு முறித்துக் கொண்டு போய் விடலாம் தான் - ஆனால் தொடர்ந்து இங்கே இருந்தால்தானே அதிதியின் மேல் ஒரு கண்ணை வைக்கக் கூடும்..

இல்லையெனில் அந்த மெட்ராஸ் பாஷை பேசும் ஆளிடம் எப்படி, என்ன தகவல் தருவது?

ஆனால் அவளைப் பார்த்தால் லட்சங்களில் புரள்பவளாயில்லை.

ஆனால் அதிதி பணக்காரி - கோடீஸ்வரி.

தவிர அத்தனையிலும் நிச்சயம் மர்மம் இருக்கிறது - ஆக காசும் நிச்சயம் இருக்கும்!

"பிராஜெக்ட் விஷயமாய் விஷ்ணு" என்றபடி முயன்று புன்னகைத்தவள் அவன் விரல்களில் தன்னதைக் கோர்த்துக் கொண்டாள்.

எடுக்கப்படும் இப்படத்தின் தயாரிப்பாளரின் தம்பியான விஷ்ணு - "ஸ்பாட்டுல் நாம யாரேனும் நிற்கணும்ன்னா" என்று அண்ணனைச் சரிக்கட்டி விட்டு, நிலகாவை தன் துணைக்கென்த் தள்ளி கொண்டு இங்கே வந்திருந்தான்.

தான் வாங்கித் தந்த தங்க டோலக்குகள் ஆட... உற்சாகமாய் உடன் வந்த நிலாவை இப்படிச் சீண்டுவது அவனுக்குப் பிடித்திருந்தது- ஆனால் அந்த அதிதி இவளை விட அம்சமானவள் - ஆனால் மகிழும் ரகமாத்தான் தெரியவில்லை!

அதே இடிப்பு அசைவுகளை பதிமூன்று நாம் பார்த்த நவாபித்கேப் படபிடிப்பு சலித்து விட...

''நாம திரும்பலாமுங்க'' என்ற பிறகே, அதிதியும் நேரமானதை உணர்ந்தாள். கால்களை எட்டிப்போட்டும், அவர்கள் வீடு சேர்ந்த போது ஏறக்குறைய மணி ஏழு!

அமாவாசைக்கு இரு தினங்களே இருந்தாலும், மழை அறிகுறிகளாலும் இருட்டி விட்டிருந்தது!

வீட்டில் அக்ஷயின் குரல்.

''இல்ல வீனா - நீ எதற்கும் இங்கே வந்திடு - அப்பதான் எனக்கு வசதி'' என, இவன் பல்லைக் கடித்தான்!

இனி தான் அவனுடன் அதிகம் பேசமாட்டோம் என்ற முடிவில் தன் காதலிக்கு அழைப்பு விடுகிறானோ?..

பொறுமியவனின் எதிரே வந்து நின்றவனின் முகம் இறுகியிருந்தது- ''காலையிலேதான் சொன்னேன் அதிதி... பிறகு இப்படி...'' என்று அக்ஷய் ஆரம்பிக்க,

''ராத்திரிக்குச் சப்பாத்தி...'' என்றபடி நழுவினாள் நாயாய்!

''நான் அதிகம் பேசலை- நடந்தேன். புனலூரினாய் போய் பார்த்துட்டு வந்தேன்.''

''அங்கே... இத்தனை நேரமா? அங்கே குளிக்கிறது ஆபத்து''.

''ஷூட்டிங் நடக்குது.''

அவன் முகம் மேலும் கடுமையானது.

''அப்ப நிறைய கூட்டமிருந்திருக்கும்...'' -

அவள் தோள்கள் சிறு அலட்சியத்துடன் குலுங்கின- ''ஆமா - எனக்கொரு மாற்றம் தேவைப்பட்டது, அக்ஷய்.''

''ஸாரி அதிதி.. காலையில் கொஞ்சம் கடுமையாய் பேசிட்டேன். ஆனா வீனாவிடமிருந்து வந்த தகவல் அப்படி! நீ சொன்ன அடையாளங்களுக்கும் பொருந்தும் வகையில் ரெண்டு பேரை பொலிஸால் டிரேஸ் பண்ண முடிந்ததாம் - முன்பு செய்யப்பட்ட நாலு கொலைகளுக்கும் அவங்கதான் காரணம்னு கூட ஒரு சந்தேகமாம்...''

''அப்ப அவங்களை கைது பண்ணியாச்சா?''

''பெரிய லெவலின் பாதுகாப்பு, பணபலம் இருக்கும் துணிவில்தான் அடியாட்கள் கொலைக்குத் துணிவாங்க. ஆதாரமில்லாமல்...''

''நான் அவங்களை அடையாளம் காட்டினால் கூடவா?''

''அது தேவையான்னு இப்ப யோசிக்கிறேன், அதிதி.''

அவள் ஆச்சரியத்துடன் நிமிர்ந்தாள்-

''என்ன சொல்றீங்க?''

''நான் பெரிய முட்டாள்னு...''

அவன் முஷ்டிகளை இறுக்கியபடி மேலும் கீழுமாய் நடக்க, இந்த முறை 'ஒத்துக்கறேன்' என்றவளால் கேலி பேச முடியவில்லை!



குழம்பி நின்றவளை நெருங்கி அவள் தோள்களைப் பற்றினான்.

இதுவரை அகன்மாத்தாய் கூட அவர்கள் தொட்டுக் கொண்டதில்லை.

இவன் பார்வையே தகிக்கிறதே... இவன் தன்னைத் தொட்டால் பொசுக்கிப் போவேனோ - என்றவள் வெட்கமின்றி ஒரு முறை நினைத்ததுண்டானாலும் .... சட்டென்று நேர்ந்து விட்ட அந்த ஸ்பரிசத்தில் உறைந்து விட்டாள்!

அவனது உள்ளங்கைகள் அவளது இளந்தோள்களைத் தகித்தன.

அதில் அழுத்தமில்லை என்றாலும் இவளுக்கு மூச்சுத் திணறியது! தவிப்புடன் அவனை ஏறிட்டாள்.

''நான் முட்டாள் அதி. நம்ப வீட்டுப் பெரியவங்களும் எனித்தமட ஏற்பாட்டிற்கு சம்மதிச்சாங்கன்னு தெரியலை- முக்கியமாய் உன் பெரியப்பா எங்க வீட்டாருக்குச் சுவநம் - ஜெயிலிற்கு ஆபத்து வரக்கூடாது, ஜனனி பத்திரமாய் தங்களோடு இருக்கணும்கற ஆசை... நியாயந்தான். ஆனா உன் பெரியப்பாவாவது என்னைத் தடுத்திருக்கணும்-

''வேணாம்ப்பா- ஏன் பொண்ணை இப்படியான ஆபத்தில் இறக்காதேன்னு அவ எதையும் பார்க்கலை, கேட்கலைன்னு''-

''உங்கண்ணன் உயிர் மட்டுமல்ல அந்தக் கொலையாளிகளால் அழித்திருக்ககூடிய வேறு பலரும் பிழைப்பாங்களே... ஆ இதென்ன தப்பு?''

''இல்லை அதி. உன்னை பணயம் வச்சு எந்த ஆதாயமும் வேணாம்...''

என்றபடி மேலும் நெருங்கியவனின் ஆஃப்டர் ஷேவ் லோஷன் மணம் அவனது உடல் வாசனையோடு கலந்து அவளைத் தாக்க, கிறுகிறுப்பானது.

முக்கியமான விஷயம் பேசும்போது இதென்ன அசட்டுத்தன மயக்கம் என்றவள் தன்னையே அதட்டிக் கொண்டாள்.

அத்தனை நெருங்கி நின்று பேசியது அவன் மனக்கதவை திறந்து விட்டது போலும் தொடர்ந்து பேசினான்-

''எங்கண்ணி இறக்கும் முன்னமே அவங்களின் பல மாற்றங்கள் - தன் பிறந்த வீட்டு வண்டவாளம் புரிஞ்சிட, அவங்க மனம் மாறி எங்களோடு இணக்கமாய் பழகினாங்க - பாசம் காட்டினாங்க. அதில் அம்மாவிற்கும் பூரிப்பு.

'கோவிலுக்கு போகலாந்தை - என்கிறாட்ட,

எங்ககூட உட்கார்ந்து சாப்பிடறா, கல்யாண வீட்டுக்கு எந்தப் புடவைக் கட்டிக்கிறதுன்னு கூட கேட்டான்னு அவங்க உற்சாகமா, எனக்குள்ளாய் ஒரு உணர்வு 'இது நிலைக்காதுன்னு' அதே போலத்தான் ஆச்சு.''

இவன் உடம்பில் மெல்லிய நடுக்கம் ஓடியது.

''இப்பவும் அந்தக் கொலையாளிகளை நாம அத்தனைச் சுலபமாய் மடக்கிட முடியாதுன்னு ஒரு பயம், அதிதி. குறுக்கு வழியில் அதிரடியாய் சம்பாதிக்கும் அவங்க, உன் சாட்சியால் ஜெயிலில் அடைபட்டால்...

13

14

தோந்து கொண்டாள். நான் ஒன்றுக்கு நாற்பது முறை லீலா லீலா என்று அவன் உருகியதைக் கேட்ட பிறகும் அநாவசிய சிக்கலைக் கோட்டைகளைக்கட்டியது தன் தப்புதான்.

இந்தச் சில நாட்களில் அல்ல, அக்ஷயைச் சந்தித்திலிருந்தே இவளுள் இயைறிவது தடுமாற்றம், தவிப்பு, திகிப்புதான்...!

அவனோதன்னை விமானமேற்றும் போதும் கூட போனில் "லீலா. எல்லா ஏற்பாடுகளும் பக்கா" என்றவனைத்தானே கொண்டாடிக் கொண்டிருந்தான்!

"நீ இங்கே வர முடியாததுதான் குறை" என்ற உருகல் வேறு!

ஆஸ்திரேலியா போய் சேர்ந்த தன்னிடம் ஒப்பிற்கு இரு முறை பேசியதோடு சரி. அதுவும் பிடிபட்ட குற்றவாளிகளின் விசாரணையைப் பற்றி, அவர்கள் செய்த, செய்யவிருந்த கொலைகளை ஒத்துக் கொண்டது. தீபாவின் பெற்றோர்களின் புலம்பல் என்று எல்லாம் பொதுவானவைதான். ஒரு பிரைவேட் விசாரணையில் நீ சாட்சி சொல்ல நேரலாம் அதி- ஆனால் அந்த ரெண்டு குற்றவாளிகளுக்கும் ஆயுள் தண்டனை நிச்சயம். உன் ஆதங்கப்படி இந்த அப்புகளை எல்லாரையும் படக்கி விசாரிக்கறாங்க. வழக்கு போடப் போறாங்க'

எல்லாம் இவள் கேட்க ஆவலாயிருந்த தகவல்கள் தான்- ஆனால் ஏங்கியது வேறு எதையோ கேட்க...!

'சாப்பிடும் போது உன் சமையல் ஞாபகம் வருது, அதி... அதுவும் அந்த மஷ்ரூம் சட்னி- என்னை ஆறேழு இட்லியை விழுங்க வைத்ததே?

நீ எதிரேயில்லாமல் செஸ்-கேம் சுவாரஸ்யப்படலை. 'உனக்காய் தான் வாங்கின டல் லாரில் பெட்டியோடு இப்போ என் அறையில்தான்... உன் வாசனையோடு..?

வேறு ஒருத்தியை நேசிப்பவனிடமிருந்து இப்படியான பேச்சை எதிர்பார்ப்பது முறையற்ற அதிகப்படிதான்... ஆனாலும்... இதனூடே செல்லாயி வேறு இம்சித்தாள்!

'காய்ச்சிய எண்ணெ பாப்பா- தடவி உருவி விடறேன். தேய்ச்சா பித்தளைவிளக்குக்கூட பொன்னாயிடுதே. உத்தங்க மேனி எப்படித்தான் ஜொலிக்காது?' என்றபடி எண்ணெய் தேய்த்து குளிக்க வைத்தாள். மணிக்கொருதரம் எதையேனும் எடுத்து வந்து ஊட்டினாள்.

'இன்னும் கொஞ்சம் ஊட்டமாயாகக் கனமாயிருப்பே பாப்பா- என்றபடி. குளிர்ந்த உடம்பும், நிரம்பிய வயிறுமானதில் தூக்கமும் அதிகப்பட்டது. இத்தனைக் கவனிப்பில் மூன்று நாட்களிலேயே உடம்பு சற்று தேறியது போலத்தான் தோன்றியது.

ஆஸ்திரேலியாவில் தான் எடுத்த படங்களை இண்டர்நெட் மூலம் தோழிகளுக்கு அவள் அனுப்பி முடித்த போது பெரியப்பா எட்டிப் பார்த்தார்.

"வாங்க பெரியப்பா- இதென்ன முந்திரி பக்கோடாவை நீங்க எடுத்துட்டு வரீங்க?"

"சேர்த்து கொறிக்கலாமுன்னுதான். ஆனா இதுல ஒன்று ரெண்டுதான் எனக்குன்னு- செல்லாயி. மத்ததெல்லாம் கல்யாணப்



பொண்ணுக்காம் வர்ரவங்க உன்னைப் பார்த்து அசந்திடணுமாம்".

"யா... யார் வர்ரா, பெரியப்பா?"

"தேடி வர்ர சம்பந்தம் எனக்கு ரொம்ப திருப்திம்மா"

"கல்யாண பேச்சே வேணாம், ப்ளீஸ்..."

பெரியவர் சற்று சோகமாய் இவளைப் பார்த்தார். எல்லாவீட்டிலும் பிள்ளைங்க சொல்றது தான் இது. கூச்சம், கலக்கமெல்லாம் இருக்குந்தான். ஆனா ஒருத்தருக்கொருத்தர் பார்த்து பேசினாச் சரியாயிடும்டா..."

"படிப்பு... இன்னும் முடியலையே..."

"இனி நீ கல்லூரிக்குப் போகத் தேவையில்லை. மூனு மாச ப்ராஜெக்ட் டிகிரிகைக்கு வந்துடுமே. சம்பந்தி வீட்டாரே உன்னை சகோவின் அண்ணாவிக்குக் கேட்டாங்கன்னு முதல்ல எதிர்பார்த்தேன். அது சரிவரலை. நம்ம காக மேல கண்ணோட சந்தோஷம் போக, நாளி, தோஷமுன்னு வேறு உளறுனாங்க. இந்த இடம் அப்படியில்லை... பண்பானத் தெரியறாங்க"

"கல்யாண எண்ணமே எனக்கில்லை பெரியப்பா..."

தழுதழுத்தக் குரலை உயர்த்த முயன்றாள். "தருண் கூட அடுத்த மாசம் வர்றான் சொல்றான் வந்து தங்கைக் கல்யாணத்தை நாம் ஜாம்ஜாம்னு நடத்தப் போறானாம்!"

இவளது எரிச்சல் கூடியது. தன்னைத் தவிர எல்லாருமே ஆவலாய்த்தான் இருக்கிறார்கள்!

"நிச்சயமாய் எனக்குக் கல்யாணம் வேணாம்" கத்திவிட்டது அவள் குரல்! "உங்களுக்கிடையே ஏதும் ஊடலா அதி? முகம் வாடியிருந்ததைப் பிரிவுத் துயர்னு நினைச்சேன்..."

கலங்கிய அவள் கண்கள் அவரைக் குழப்பமாய் ஏறிட்ட நேரம், அவரது 'செல்' சிணுங்கி அழைத்தது.

"ஹலோ" என்றவரது முகம் மலர்ந்தது.

"...."

"ஆமாமாம்"

"...."

"இல்லை லீலா இன்னும் அந்தக் கட்டத்திற்குப் போகலை. பொண்ணு பிடிதாமாட்டேங்கறானே.."

இவளுக்குச் 'சுருக்'கென்றது! யாரிந்த லீலா? அவளுக்குத் தன் பெரியப்பாவையும் தெரியுமா? ரொம்ப இணக்கமாய் இவர் பேசுமளவிற்கு? எரிச்சல் மண்டியது!

தொடர்பைத் துண்டித்தவர் ஆதங்கப்பட்டார். "பாருடா, மாப்பிள்ளை வீட்டார் எவ்வளவு அவசரப்படறாங்க, ஆசைப்படறாங்க? அவங்களை அலைக்கழிக்கலாமா? கல்யாணப் பேச்செடுத்தும், 'உங்க இஷ்டம் பெரியப்பா'ன்னு நீ மானாட்டம் துள்ளி ஓடுவேன்னு நான் வந்தால், இப்படி முறுக்கிக்கிறேயேடா."

"இப்ப போனில் பேசினது யாரு?"

"இந்த வெள்ளிக்கிழமை உனக்குப் பூ வைக்க வர்றாங்க. அப்போ

உனக்கெடுத்து வர்ர புடவை என்ன நிறத்துல வாங்கலாம்றதுக்குக் கூட உன்னை ஒரு வார்த்தைக் கேட்கற குடும்பம்- இப்படி வேறெங்கேயும் அமையாது. வைட் ரோஸ் கலர் சேலை மாப்பிள்ளைக்கு ரொம்பப் பிடிச்சிருக்காம்.''

''மீனு பெரியப்பா... சுத்தி வளைக்க விளையாடாதீங்க. அந்த மீனா யாரு?''

''அக்ஷயின் செக்ரட்டரி.''

''யாருக்கு யார்?'' குழப்பமாய் உளறினாள்.

''கொலையைத் தடுக்குமளவு சமயோஜிதமும், துணிச்சலுமுள்ள நீ, இதுல மட்டும் குழப்பறே?''

''நீங்க குழப்பமாச் சொல்லுறீங்க பெரியப்பா.''

''அக்ஷயின் செக்ரட்டரி மீனா தான்! கூட படிச்ச நண்பராம். புடவைக் கடையில் புடவை செலக்ஷன். நேரே கேட்க கூச்சப்பட்டு, மீனாவைத் தூது விட்டார் அக்ஷய்... மாப்பிள்ளை!''

வாயடைத்து நின்றவளை இழுவாய் அமரச் செய்தவர்- ''என்னடா, அதிர்ந்து போயிட்டே? அவரும், பெத்தவங்களும், நீங்க சம்மதிச்சால் அதிதிதான் எங்க வீட்டு மருமகள், குலவிளக்குன்னு கேட்டுக் கொண்டதாலேதானே, நான் உன்னைத் துணிஞ்சு அவங்க வீட்டுக்கு அனுப்பினேன்!''

இவளது விழிகள் விரிந்து உருண்டன!

''அவங்க வாக்குத் தர, நானும் அக்ஷயின் தாயாரிடம் உன்னைப் பற்றின விவரங்களைச் சொன்னேன். சசிகாவின் வீட்டில் உன்னை ராசியில்லாதவளாய் நடத்தியது உட்பட! அந்தம்மா அருமையாய் பதில் தந்தாங்க 'என் பெரிய மையன் உயிரைக் காப்பாத்தின தேவதை, உங்க பொண்ணு. அவளால் என்ன மருமகளாய் வர நான் கொடுத்து வச்சிருக்கணும்!' குணத்தோடு அந்தஸ்திலும் நமக்குச் சமதையானவங்க- ஆக சந்தோஷமாய் சம்மதிச்சிட்டேன்.''

''என் சம்மதம் அவசியமாத் தோணலியா பெரியப்பா?''

''நான் அவரோடு போறேன் பெரியப்பான்னு நீ ஜான்ஸி ராணியாட்டம் கிளம்பின வேகத்திலேயே அது தெரிஞ்சு போச்சேடா...!

அதுவரை தான் நடத்திய சிறு நாடகத்தின் முத்தாய்ப்பாய் வாய் விட்டு சிரித்தார் தேவராஜ்!

இளம் ரோஜா நிற டிஷ்யு புடவை, மாணிக்கங்கள் கோர்த்த நகைகள், பூ, புன்னகையோடு பௌர்ணமி நிலவொளியும் அவள் ஜாஜ்வல்யமாய் ஒளிரும்

''மாப்பிள்ளை பையன் நடத்தை எப்படி?''

''ரொம்ப பவ்ய சுபாவம், 'கேப்' கூட வெடிக்க மாட்டாரு.''

-ஆர். தங்கராஜ், திருப்பூர்.





அதிதியை அலங்காரமாக்கியிருந்தன!

அந்த அழகை, அழகிய கணத்தை தன்னுள் பதித்துக் கொள்ளும் தாபத்துடன் அவளைப் பார்த்திருந்தான் அக்ஷய். அதைக் கவனியாதவள் போல மென்மை ஜாஜ்வல்யமிக்க புன்னகை சிரிப்பு உருண்டது.

''நான் கொடுத்து வச்சவன் அதிதி''

''நான் என்ன யோசிக்கறேன்- தெரியுமா?'' சீண்டினான். ''எனக்கே யோசிக்க முடியலை. இதில் நீ என்ன யோசிக்கறேன்றது எப்படித் தெரியும்?''

சரணாகதியானாள் ''நம்மது பெரியவங்க நிச்சயித்ததா... இல்ல காதல் கல்யாணமான்னு''

''கடவுள் போட்ட அசாதாரண முடிச்சுன்னு தோணுது. நீ எங்களுக்கு அறிமுகமான சூழல், சந்தர்ப்பம், பிறகு நாம சேர்ந்திருக்க நேர்ந்ததெல்லாம்... சாதாரணமாய் நடக்கக் கூடியதா? நான் பார்த்து ஆச்சரியப்பட, ஆசைப்பட்ட நீ எனக்குப் பெரியவங்க ஆசியோடு கிடைச்சாச்சு... ஆனா இடையே நான் கொஞ்சம் சொதப்பிட்டேன், அதிதி...''

அவனது ஓரக்கண் அது என்ன என்று வினவியது. தளுவான ஊஞ்சலில் அவன் அமர்ந்தான். சற்று அகன்ற பலகை என்னும் அவளை மிக ஒட்டியே உட்கார்ந்திருந்தான். அவள் விழிகள் துணிவை இழந்து, தழைந்தன.

அவனது வெப்ப மூச்சில் அவளது பட்டுக் கன்னங்கள் கனிந்து கொண்டிருந்தன.

''இது மாதிரி நாம நெருக்கமாய் எத்தனை சந்தர்ப்பத்தில் இருந்தோம்... ஒரு முத்தம் கூடத் தராமல் வீணாக்கிட்டேனே.''

''எங்கே... உங்களுக்குத் தான் மீனாவோடு பேசவே பொழுது போதலியே''

''ஆங்... அதுதான் அம்மணியின் சொதப்பல்! மீனாவோடு நான் பேசினதை பற்றி அத்தனை பொறாமையோடு எரிஞ்சு விழுந்தியா... அதில் தான் 'அடடா... அவ்விடமும் நம்மேல் காதலால் உருகுறாங்க'ன்னு எனக்குப் புரிஞ்சது. அதுவரை ஒருதலைக்காதலோன்னு மறுகல்!''

''உங்களுக்குத்தான் பொறாமை. என்னைப் பரிதாபமாய் கூடுத்த வச்சு, ஆண்கள் என்னைப் பார்க்கக் கூடாது, நான் அவங்களோடு பேசக் கூடாதுன்னு எல்லாம் எத்தனை தர்பார்?''

''நியாயந்தானே? இவ்வளவு அழகான பொண்ணைப் பாதுகாக்க வேண்டாமா?'' ''இப்பவும் சொதப்புறீங்க...'' என்றாள் மிக மென்மை. துலி திக்கத்தவன் வாய்விட்டு சிரித்தான்.''

''இல்ல சுதாரிக்கறேன் அதி'' என்றபடி அவளை மென்மையாய் தன்புறம் திருப்பினான். தொடர்ந்த தழுவலும், முத்தங்களும் இருவரையும் தகித்தன... திக்கித்தன....''

முற்றும்